www.tamilarangam.net

சுமைகள்

சுமைகள் 22 ஆடி, ஆவணி 1997 Sumaihal Nr 22 Juli, August 1997 Løssalg 10 Kr

# இனவாதத்தின் பசிக்கு உயிர்தானா உணவு?

கண்ணை மூடித் திறப்பதற்குள் அடுத்த நாள் வந்து விடுவது போல் பதினான்கு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. இந்தப் பதினான்கு வருடங்களில் எத்தனை சம்பவங்கள் நடைபெற்று விட்டன. எனினும் இந்தப் பதினான்கு வருடத்தில் இலங்கையில் இடம் பெற்ற சம்பவங்கள் பெரிதும் அவலமானவை.

1505 உருவான காலனித்துவவாதிகளின் கொடுமைகளின் வடு என்பது எமது சமுதாயத்தில் தொடர்ந்தும் வேறு வடிவத்தில் காண முடிகின்றது. இதன் விளைவுகளில் ஒன்றுதான் தமிழ் மக்கள் மீது 1983 ஆடிக் கலவரமாகும். இக்கலவரக்காலத்தில் குட்டிமணி, தங்கத்துரை, போன்றவர்கள் உட்பட 52 போராளிகள் 25, 27ம் திகதிகளில் வெலிக்கடையில் கொல்லப்பட்டனர். திட்டமிடப்பட்ட இனக்கலவரத்தின் மூலம் பலகோடிக் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டனர். உள்நாட்டிலேயே பல ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாயினர்.அத்துடன் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்து யுத்தத்தில் 50,000 மேற்பட்ட பொதுமக்கள் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர்.

இந்தப் பதினான்கு வருட நினைவு தினத்தில் இனவாத, பாசிசக் கரங்களின் கைகளில் அகப்பட்டு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும், போராளிகளுக்கும், எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

# கடந்த கால தவறுகளில் இருந்து மீள்வோம்!

இலங்கையில் தமிழ் மக்களின் தேச விடுதலைப் போராட்டம் உக்கிரமடைந்த இன்றைய நிலையில். தமிழர்களாகிய நாம் நமது தேச விடுதலைப் போராட்டத்தின் கடந்து வந்த பாதையை மீளாய்வுக்குட்படுத்த வேண்டும். அந்த வகையில் 1983 க்கு பிற்பட்ட காலப்பகுதியில் நடந்தவற்றை ஒரு சிறு குறிப்பாக இங்கு தர முயற்சிக்கின்றோம்.

**அகதிகளாக!**

14 வருடங்களுக்கு முன் யூலை மாதம் 23ம் திகதி புலிகளால் தின்னைவேலியில் வைத்த நிலக்கண்ணி வெடியில் சிக்கி 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்ட இனக்கலவரத்தில் பல நூறு தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், பலநூறு பேர் படுகாயமாக்கப்பட்டுனர். இத்துடன் நின்றுவிடாத இவ்வினக் கலவரம் பல லட்சங்களுக்கு மேல் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியது. அதுமட்டுமல்லாது தமது சொந்த நாட்டிலேய மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். தமது சொந்த நாட்டிலேயே அகதி களாக்கப்பட்ட மக்கள் யாழ்ப்பாணம், தமிழ் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இக்கலவரத்தின் பின்னர் தமிழர்களைத் தவிர சிங்களவர்கள் எவரும் வடபகுதியில் வாழமுடியாத நிலையும், தனிச் சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் வாழ முடியாத நிலையும் ஏற்பட்டது. இதைவிட சிங்கள அரசால் சகல துறைகளிலும், தமிழ் பிரதேசங்களிலும் ஒடுக்குமுறை அதிகரித்தன. (இக்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.)

**மக்களின் உணர்ச்சி**

இந்தக் கொடுமையைக் கண்ட பல இளைஞர்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தில் தம்மை அர்ப்பணிக்கும் பணியில் ஈடுபட்டதன் விளைவாக ஆங்காங்கே சிறு குழுக்களாக அரசுக்கு எதிராக யுத்தம் புரிந்து வந்த தமிழ் அமைப்புகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொண்ட சிறிய, பெரிய அமைப்புக்களாக பரிணாமம் பெற்றன. (உண்மையில் இவற்றில் இணைந்த அனைத்து இளைஞர்களும் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை தத்துவத்தை உணர்ந்த நிலையிலா? இயக்கங்களில் இணைந்தனர்? இதுபற்றி தனியாக ஆராயப்பட வேண்டும்.) அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பைக் காட்டும் நிலையில் தாமும் ஆயுதம் தாங்கி போராட வேண்டும் என்ற ஆர்வத்தால் இணைந்தவர்கள் ஒரு சிலர், ஆயுதக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு இணைந்தவர்கள் இன்னும் சிலர் இவற்றை விட கிராமங்களில் ரௌடியாக திரிந்த பலர் தமது ரௌடித் தனத்தை வளர்க்கும் முகமாக இயக்கங்களில் இணைந்தனர். இணைந்தவர்களில் குறிப்பிட்ட சிலர் மாத்திரம் உண்மையான விடுதலை நோக்குடனும் வர்க்க சிந்தனையுடனும் இணைந்தனர். இவ்வாறு பலதரப்பட்ட சிந்தனை கொண்டவர்களை இயக்கங்கள் தமக்குள் உள்வாங்கியதுடன் மாத்திரம் நின்று விடாது தொடர்ந்தும் பலரை உள்வாங்கிய வண்ணம் இருந்தன.

1983 – 85 காலப்பகுதிகளில் அண்ணளவாக 20 – 30 மேற்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கங்கள் (PLOTE, TELO, EROS, EPRLF, LTTE, NLFT, TELE, TELA, TENA, TEA, TERA, RELO, பேரவை, பாசறை, கிராமிய உழைப்பாளர் சங்கம், நாகப்படை, கழுகுப்படை, செம்படை, சங்கிலியன் பஞ்சாயத்து ..........) யாழ்ப்பாணத்தில் இயக்கிக் கொண்டிருந்தது. அதில் குறிப்பாக ஐந்து இயக்கங்கள் மாத்திரமே மிகப் பெரியவையாக இருந்தன. அவை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), தழிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழப் புரட்சி அமைப்பு (EROS) என்பனவாகும்.

***சகோதரப் படுகொலைகள்***

இவ் ஐந்தையும் விட சிறு சிறு குழுக்களாக இருந்த இயக்கங்களும் மக்கள் மத்தியில் பிரபல்யம் ஆகும் பொருட்டு ஒரு சில தாக்குதல்களை நடத்தியது அதில் TELA புகையிரத வண்டியை யாழ்பகுதியில் வைத்து எரித்ததன் மூலம் மக்களின் நம்பிக்கைக்கு உரியதாக வளர்ந்து வரத் தொடங்கியது இதை அவதானித்த புலிகளால், இவ்வியக்கத்தின் தலைவரான ஒப்பிரோய் தேவன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன்பின்னர் இவ்வியக்கம் சிதைந்து போனது.

அதேபோன்று TELE என்னும் சிறிய அமைப்பு ஒன்று ஒருவாகிவளர்ந்து வந்தது. இதனை அழிக்கும் நோக்குடன் இவ்வியக்கத்தின் தலைவரான ஜெகனை சுட்டுக் கொன்றனர். ஒரு மிகப்பெரிய தாக்குதல் ஒன்று நடத்த முற்படும் போது அவருடன் கதைப்பதைப் போன்று சென்று புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் அவ்வியக்கமே அழிந்து போனது. அவ்வியக்கத்தில் இருந்த உறுப்பினர்களை புளொட் தனக்குள் வாங்கிக் கொண்டது.

இவ்வாறு இராணுவ வாதத்துடன் கூடிய சகோதரப் படுகொலைகள் ஆரம்பமாகியது. இவற்றிற்கு இடையில் ஒவ்வொரு இயக்கமும் தமக்கு என ஒவ்வொரு ஊர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அவ்வாறு உருவாக்கப்பட்டதில் புளொட்டிற்கு சுழிபுரம், புலிகளுக்கு அச்சுவேலி, வல்வெட்டித்துறை, ........ இவ்வாறு மற்றைய இயக்கங்களும் தமக்கு என சில பிரதேசங்களை கைப்பற்றிக் கொண்டன. அவ்வூர்களுக்கு மற்றைய இயக்கங்கள் பிரச்சாரம் செய்பவரின் அடித்து துரத்தியும் வந்தனர்.

இவ்வாறு தமது கட்டுப்பாட்டில் இருந்த இடங்களிற்கு வேறு எவராவது வந்தால் என்ன நடக்கும் என்பதற்கு அறிகுறிதான் சுழிபுரத்தில் நடந்த 6 பேர் கொலை. இவ்வாறு வெளியுலகிற்கு இவர்கள் தமது இயக்கங்கள் பலம் பொருந்தியவை எனக் காட்டிய வண்ணம் இருக்கையில் தமது இயக்கங்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. அவற்றை விவாதித்து தீர்ப்பதற்கு பதிலாக கருத்து முரண்பாடுகள் உடையவர்களை தீர்த்துக் கட்டினர். இதில் புளொட்டும், புலியும் முன் வரிசையில் நின்றன. புலி தனக்கு எதிரானவர்களைத் தீர்த்துக் கட்டும் போது அவர்களுக்கு வீரஅஞ்சலி செலுத்தியது. புளொட் புதைத்தது. புளொட்டின் புதைப்பினைத் தொடர்ந்து உள் முரண்பாடுகள் முற்றின. இதனால் புளொட்டில் இருந்து தீப்பொறி என்ற ஒரு அமைப்பு பிரிந்து போனது. புலி இவ்வாறான சக்திகளை பேச்சு மூச்சின்றி வீரவணக்கம் செலுத்தி வந்தது. ரெலோவினுள் தாஸ், பொபி குழு என இரு பிரிவாக இருந்து இயங்கினர். சில சதித்திட்டத்தின் மூலம் யாழ் பெரியாஸ்பத்திரியில் வைத்து தாசை கொண்றனர் பொபி குழுவினர். இதன்மூலம் வீரக்தியுற்ற ரெலோ உறுப்பினர் சிலர் அரசுடனும், புலிகளுடனும் ஒதுங்கியும் சென்றனர். இதன்விளைவாக ரொலோவும் மக்களின் பலத்தை இழந்தது. ஈபிஆர்எல்எவ் உள்ளும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. அதாவது (பத்மநாபா) வரதராசப் பெருமாள் – சுரேஸ்பிரேமச்சந்திரன் குழுவுக்கும், டக்ளஸ் தேவானந்தா விற்கும் இடையிலேய கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இறுதியில் டக்ளஸ் ஈபிஆர்எல்எவ் இல் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இவற்றில் படித்த பெடியங்கள் என்ற ஈரோசும் விதிவிலக்கல்ல அதனுள்ளும் சாதிப்பிரச்சனையானது புகைந்து கொண்டிருந்தது. இதற்கு எதிராகப் போராடியவர்களில் ஒருவரான மைக்கல் என்றஆரம்பகால உறுப்பினர். மைக்கல் உட்பட பலர் 1985 டிசம்பர் மாதம் காணாமல் போனார்கள். இவர்கள் ஆயுதங்களுடன் இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் போது கடலில் ஈரோசில் இருந்தவர்களால் புலிகளுக்கு செய்தி வழங்கப்பட்டு, புலிகளால் கடலில் கொல்லப்பட்டனர்.

இரண்டாம் ஈழப்போர் காலகட்டத்தில் ஈரோசில் ஒரு பகுதி புலிகளுடன் இணைந்தனர். இதில் சோகம் என்னவெனில் தனது கீழ்மட்டப் போராளிகளை நடுத்தெருவில் விட்டு விட்டு தலைமையின் ஒரு பகுதி புலிகளுடன் இணைந்தது. யாழ்பாணத்துக்கு வெளியே இருந்த சங்கர் ராஜி, சுதா மாஸ்டர் பிரிவு தனியாக இயங்கி வருகின்றது.

இவ்வாறு உட்பூசல்களால் சிக்குண்ட நிலையில் மற்றைய இயக்கங்கள் இருந்த போது புலிகள் மாத்திரம் அவ்வாறான நிலைக்கு தள்ளப் படவில்லை காரணம் அவ்வாற கருத்துக்கொண்டவர்கள் அவைரும் முளையிலேயே கிள்ளப் பட்டனர். வெளிப்படையாக பூசல்கள் தெரியாததினால் புலி மக்கள் மத்தியில் பிரபல்யமானது. இதைவிட இராணுவத் தாக்குதல்களை எடுத்து நோக்கின் புலியும் ரேலோவுமே அதிகமான தாக்குதல்களை செய்தனர். இதனால் மக்கள் மத்தியில் இவர்கள் மீது அதிக நம்பிக்கை பிறக்கத் தொடங்கியது புளொட், ஈபி, ஈரோஸ் ஆகியன ஆங்காங்கே ஒரு சில தாக்குதல்களை செய்த போதும் மக்களை தேச விடுதலைப் போராட்டத்திற்கு இணைப்பதாகக் கூறிக் கொண்டனரே ஒழிய உண்மையில் அவர்களும் மக்களை இணைக்கும் அளவிற்க வளர்ந்திருக்கவில்லை. (இதற்கு இவர்களின் அரசியல் தான் காரணம்) ஒரே தாக்குதல் மூலம் தமிழீழத்தை பெற வேண்டும் என்பது புளொட்டின் பிரச்சாரமாக இருந்தது.

இக்காலத்தில் ஒவ்வொரு இயக்கமும் தமக்கு அதிகமான ஆட்களைச் சேகரிப்பதிலேயே கவனத்தைக் கொண்டிருந்தனர். இதனால் இயக்கங்களினுள் ஊடுருவல்கள் ஏற்பட்டன. ஒரு பொது எதிரிக்கு எதிராக இருக்க வேண்டிய ஊடுருவல் விடயம் சகோதர அமைப்புகளிற்குள்ளும் ஏற்பட்டது. இவ்வாறு தமது சகோதர இயக்கங்களை மாத்திரம் கவனத்தில் கொண்ட அதேவேளை கீழ் மட்ட தோழர்களால் சில இடங்களில் ஒரே நேரத்தில் ஆயுதங்கள் பரிமாறப்பட்டு பொது எதிரியான

www.tamilarangam.net



இராணுவத்தினை அடித்து விரட்டினர். இதற்கு சிறந்த உதாரணம் தெல்லிப்பளை நோக்கி இராணுவம் புறப்படும் போது புளொட் உறுப்பினர்களும், ரெலோ உறுப்பினர்களும் இணைந்து தாக்கினர். அந்த இடத்தில் புலிகளும் வந்து உதிவிபுரிந்தனர் என்பது வரலாறாகிவிட்டது.

**ஐக்கிய முன்னணியின் உருவாக்கம்!**

EROS, TELO, EPRLF ஆகியன இணைந்து ஈழத்தேசியவிடுதலை முன்னணியை உருவாக்கினர். இந்த ஐக்கியத்தில் அனைத்து இயக்கங்களையும் இணைப்பதற்கு பலர் பாடுபட்டனர். இவற்றில் EROS, TELO, EPRLF, PLOTE ஆகியன நாலும் முதலில் தமக்குள் பேச்சு வார்த்தை களை நடத்திக் கொண் டிருந்தன. ஆனால் திடீர் என புளொட்டை தவிர்த்து விட்டு புலி அதனுள் புகுந்தது ஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்டது. 10.4.85 அன்று தமிழீழ புத்தகத்தில் ஒரு முக்கியமான நாளாக எல்லோராலும் வர்ணிக்கப்பட்ட நாளாகும். இவர்கள் கீழ் வரும் 5 அம்சங்களை கொண்ட தீர்மானத்துடன் இணைந்தனர்.

1) சிறிலங்கா அரசின் ஆதிக்கத்தில் இருந்தும், அடக்கு முறையில் இருந்தும் எமது சமுதாயத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும் வென்றெடுத்தல்.


2) இலங்கை வாழ் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசைத் தவிர்ந்த வெறெந்து குறைந்தபட்ச சமரசத்திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.

3) பரந்து பட்ட மக்களின் பங்களிப்போடு பரிணாமம் பெறும் வெகுஜன ஆயுதப் போராட்டத்தை (மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளல்.

4)தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்து, சுதந்திரத் தாய் நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டி யெழுப்புதல்.

5) உலக ஏகாதிபத்திய, நவகாலனித்துவப் பிடியில் இருந்து எமது தேசத்தைப் பூரணமாக விடுவித்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

அதன் பின் நான்கு இயக்க தலைவர்களும் இணைந்து ஒரு அறிக்கையும், படத்தையும் எடுத்து



COMRADES-IN-ARMS: The leaders of four organisations of Sri Lanka Tamil militar (from left). Mr. Sabaratnam (TELO), Mr. Pathmanaba (EPRLF), Mr. Prabhakaran (LTT and Mr. Balakumar (EROS), have decided to work together for Eelam.

Tamil militant groups come together

வெளியிட்டனர். 1986 ஆரம்பத்தில் புளொட்டின் உட்பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக ஒரு மகாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது அதற்கு உமா மகேஸ்வரனையும் வரும்படி புளொட் டின் தள உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் அம் மாநாட்டிற்கு உமா மகேஸ்வரன் வரவில்லை அவருக்குப் பதிலாக கண்ணன், வாமதேவன், செந்தில் (புளொட்டின் மத்திய குழு உறுப்பினர்கள்) பாபுஜி யும் கலந்து கொண்டனர். அங்கும் எந்த விதமான முன்னேற்றமும் இன்றி அக்கூட்டம் முடிவுற்றது.

**ஐக்கிய முன்னணி அழிவு**

1986 காலப்பகுதியில் பொது ஐக்கிய முன்னணிக்குள் திருவிளையாடல் ஆரம்பமாகியது அதாவது ஐக்கிய முன்னணி தனக்குள் தானே விழுங்கத் தொடங்கியது. முதலாவதாக ரெலோ அழிக்கப்பட்டது. ஒரு சில முகாம் களில் புதிதாக இயக்கத்துக்கு இணைக்கப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் பரிதாபத்துக்குரிய விடயம் என்னவெனில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல முகாம்களில் இருந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தோழர்கள் புலிகளின் தாக்குதல் தொடங்கியதுடன் இடங்கள் தெரிந்ததால் புலிகளின் கையில் அகப்பட்டு பலியாகினர். ஆனால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருசிலர் மாத்திரமே புலிகளின் கையில் அகப்பட்டனர் அதிகமானவர்கள் தப்பிச் சென்றனர். தமது தாய் நாட்டிற்காக உயிரை அர்ப்பணிக் முன்வந்த அந்தத் தோழர்கள் சகோதர இயக்கத்தின்

காட்டுமிராண்டித் தனத்தால் உயிரை விட்டனர். பின்னர் புலிகள் ரெலோவிடம் இருந்து கைப்பற்றிய பொருட்கள் வாகனங்கள் என சிலவற்றை யாழ்ப்பாணத்தில் பார்வைக்கு வைத்திருந்தனர். இதில் வேடிக்கை என்ன வென்றால் பார்வைக்கு வைக்கப்பட்டவற்றில் அரைப்பகுதி புலிகளால் கடத்தப்பட்ட வாகனங்களே. இதன்பின்னர் புலிகள், ரெலோவில் தப்பியிருந்தவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாகக் கூறி பொது மன்னிப்பு என்ற பெயரில் யார் யார் உயிருடன் உள்ளனர் என கணக்கிடலாயினர். சிலர் முகம் தெரியாதவர்கள் சுட்டுக் கொன்றனர். இதன் விளைவாக சிலர் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

புளொட் அவ்வேளையில் தந்திரமாகக் கலைந்து சென்றது. ரொலோவை பாதுகாத்தது என்ற குற்றத்தின் பெயரில் புளொட்டும் தடை செய்யப்பட்டது. புளொட்டின் தளத்திற்கு பொறுப்பாக இருந்த சின்ன மென்டிஸ் புலிகளால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட கொலை செய்யப்பட்டார். பொது ஜனங்கள் இதை சிறிதளவு கூட கண்டிக்கவில்லை காரணம் புளொட் ஏற்கனவே மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்பட்டுவிட்டது. புளொட் ஏற்கனவே மக்கள் மத்தியில் அம்பலப்படக் காரணம் அதில் நடந்த உட்படுகொலைகள் தான். அதாவது புளொட்டின் அராஜகத்தை காரணம் காட்டி புளொட்டில் இருந்து பிரிந்து சென்ற சிலர் தீப்பொறி என்ற அமைப்பை உருவாக்கினர். இவ்வமைப்பின் மூலம் வெளியிடப்பட்ட 'புதியதோர் உலகம்' என்ற புத்தகம்

இது தொடர்பாக பல விமர்சனம் ɪமக்குண்டு) புளொட்டை அம்பலப ɪடுத்தும் வகையில் அமைந்திருந்தது. ஜிப்புத்தகத்தை மற்றைய இயக்க ɪகள் மக்களுக்கு தாமே வழங்கின. ஜிக்காலகட்டத்தில் இந்தியாவில் ɪவத்து புளொட்டின் அரசியற் ɪபொறுப்பாளரான சந்ததியார் கொலை ɪசெய்யப்பட்டதும் கொஞ்சநெஞ்ச ɪதிப்பும் மக்களிடம் இருந்து ɪறிக்கப்பட்டது. பின்னர் ஈபியையும் ɪதடை செய்தனர் எந்த வித சண்டையும் ஜின்றி தடை செய்யப்பட்டது.

### ɪழத்தின் வெலிக்கடை இரத்த ɪவெள்ளம்!

ஆனாலும் கொல்லப்பட வேண்டி ɪவர்கள் என்ற புலிகளின் பட்டியலில் இருந்தவர்களை தட்ட ஒரு சந்தர்ப்பமாகவும் கிட்டுவின் வளர்ச சியைக் கட்டுப்படுத்தும் வகையிலும் கிட்டுவின் மேல் 30.3.87 கிரனைற் வீசப்பட்டதைத் தொடர்ந்து இது ஈபி, புளொட் உறுப்பினர்களுடன் இன்னும் ɪவேறு சிலருமாக 60திற்கும் மேற் ɪபட்டவர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்வத்திற்கு ஈபி நபர்கள் தான் காரணம் என புலிகள் பிரச்சாரம் செய்தனர்.

ɪரோஸ் எந்தவித எதிர்ப்பும் இன்றி புலிகளுடன் இணைந்தது. அதன்பின் சிறு சிறு இயக்கங்கள் தாமாகவே அழிந்தன. இதன்விளைவாக பல இயக்கங்கள் அரசுடன் இணைய ɪலாயின. இவ்விணைவு என்பது ɪமேலெழுந்த வாரியாகப் பார்க்கும் ɪபோது சரியானதாகவே தென்படும் உண்மையில் இது ஒரு துரோகத் தனமான செயற்பாடே. சகோதர ɪயுத்தத்தில் தோற்ற பின்னர் அந்த இயக்கத்தை பழிவாங்க வேண்டும் ɪஎன்பதற்காக தமது குறிக்கோளை, ɪகொள்கையை இழந்த நிலையில் யாரை ɪபொது எதிரி என்று அழைத்தார்களோ, அவர்களுடன் இணைந்து எந்த ɪமக்களின் விடுதலைக்காக ɪசெயற்பட்டார்களோ, அந்த மக்களின் விடுதலையைக் காட்டிக் கொடுப்பது என்பது ஒரு துரோகத் தனமே.

### இந்திய ஆக்கிரமிப்பின் காலம்

இது ஒரு புறமிருக்க டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் EPDP என்ற ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் சிங்களப் பேரினவாதத்திற்கு உதவிபுரிந்து வந்தது, வருகிறது. இவ்வாறு தமது மக்களை காட்டிக் கொடுக்கும் வகையில் இணைந்த எல்லா இயக்கமும் தம்மை ஒரு அரசியற்கட்சியாகப் பிரகடனப்படுத்தினர். எந்தப் நாடாளுமன்றப் பாதையை எதிர்த்து ஆயுதம் தாங்கினரோ அந்தப் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்களில் போட்டியிடவும் தொடங்கினர்.

இதைவிட 'பரந்தன் ராயன்' தலைமையில் ENDLF என்ற ஒரு இயக்கம் உருவானது இது இன்று வரை இலங்கை அரசுடன் கைகோர்க்கவில்லை ஆனாலும் இந்திய உளவு இஸ்தாபனமான ''ரோ'' வுடன் கைகோர்த்து நின்று வருகின்றது.

''சமாதானப் படை'' என்ற போர்வையில் இறங்கிய இவ் இராணுவம் தமது பிராந்திய ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் தமிழ் மக்கள் மீது பல ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டது. அக்காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக தம்மை அறிவித்த புலிகளுடன், இந்திய இராணுவம் ஒருசில மாதங்களில் மிப்பெரிய யுத்தத்தைத் தொடங்கியது. இவ்யுத்தத்தில் புலிகளை தோற்கடிக்க வேண்டும் என கங்கணம் கட்டி மற்றைய இயக்கங்கள் இந்திய இராணுவத்திற்கு உதவி புரிந்தன. அவ்வேளையில் புலிகள் தமது ஆயுதபலத்தால் இராணுவத்தை எதிர்த்து நின்றனர். அவ்வாறு இருக்கும் போது புலிகள் என சந்தேகப் பட்டவர்களை மற்றைய இயக்கங்கள் காட்டிக் கொடுத்தன. அக்காலத்தில் தான் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் தேன்நிலவு நடந்த காலம் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியதுடன் இலங்கை அரசு இந்திய இராணுவத்திற்கு எதிராகப் போரிட உதவி புரிந்தது.

இக்காலத்தில் புலிகளால் புளொட்டின் வன்னி முகாம் தாக்கப்பட்டு சங்கிலி என்றழைக்கப்படும் கந்தசாமி (புளொட்டின் புலனாய்வுத் துறைப்பொறுப்பாளர்) கொல்லப்பட்டார். அதேபோல் பத்மநாபா உட்பட ஒரு சிலர் இந்தியாவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். இக்காலத்தில் இன்னும் பலர் சுட்டுக் கொல்லப் பட்டனர்.அவர்களில் ஒருவன் தான் விமலேஸ்வரன். இவர் பல்கலைக் கழக மாணவர் தலைவன் விஜிதரனை விடுதலைசெய்யக் கோரி புலிகளுக்கு எதிராக நடத்திய போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர் இவரை பின் புலிகள் யூலை.1988 இல் சுட்டுக் கொன்றனர். ஒரு சில இடங்களில் புலிகளால் நடத்தப்பட்ட கொலைகள் ஈபியின் மீது பழி போடப்பட்டது. உதாரணத்திற்கு ராஜினி திராணகம என்ற பேராசிரியரை 21.8.89 அன்று சுட்டுக்கொன்று வீட்டு ஈபியின்மீது பழி போட்டனர். இக்காலத்தில் புளொட்டின் தலைவர் உமா மகேஸ்வரன் தனது பாதுகாவலர் களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### இரண்டாவது ஈழப்போர்

இவ்வாறு நகர்ந்து வந்த ஈழப் போராட்ம் திடீர் என இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து இன்னும் ஒரு கட்டத்திற்கு நகரலாயிற்று. அதாவது புலிகளின் கட்டுப்பாட்டில் வடபகுதி முழுவதும் வரத் தொடங்கியது அதை பொறுக்காத இராணுவம் தீவுப் பகுதியை தன்வசப் படுத்தி அதன் பொறுப்பை ஈபிடிபியிடம் கையளிக்கப்பட்டது. தீவுப்பகுதியில் வாழ்ந்தவர்கள்

16ம் பக்கம் பார்க்க

இவைகள் கடந்தகாலத்தில் இடம் பெற்ற அவலச் சம்பவங்கள். இவற்றை நாம் மறந்த நிலையிலோ அல்லது மறைத்த நிலையிலோ எமது போராட்டத்தை மீண்டும் முன்னெடுக்க முயற்சிப்பது ஒரு துரோகத் தனமாகவே கருதப்பட வேண்டும். இவ்வாறான தவறுகளை ஆராய்ந்து அதன் மூலம் நாம் ஒரு சரியான தெளிவை நோக்கி நகர வேண்டும் எனின் இவற்றை ஆராய வேண்டும். எமது ஆய்விற்கு கடந்த காலத்தில் வெளிவந்த வெளியீடுகளும் உதவுகின்றன. அரசியலும் இராணுவமும், ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு..... போன்ற வெளியீடுகள் ஓரளவு கடந்த கால நிகழ்வை மீளாய்வுக்கு உட்படுத்துகின்றன. இவ்வாறு கடந்த கால நிகழ்வை ஆய்வுக்கு உட்படுத்தும் போது அடுத்து கட்ட நகர்வு எவ்வாறு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதவியாக எது முன்றாவது பாதை என்ற ஆக்கம் உதவும் என நம்புகின்றோம்.

www.tamilarangam.net



ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு என்ற கட்டுரையை தோழமைப் பொறி வெளியீட்டகத்தால் 1986 இல் வெளியிடப்பட்டிருந்தனர். இக்கட்டுரை எமது போராட்டம் ஏன்தேக்க நிலைக்கு தள்ளப்பட்டது என்ற கருத்தை ஆராய்கின்றது. இவை முழுமை பெறவில்லை. இவர்கள் மலை போன்ற விடயத்தை சிறுதுளியளவே எடுத்தாய்ந்துள்ளனர். இவ்வாறான விடயங்கள் இன்று எமக்கு அவசியம் என்ற நோக்குடனேயே இதை பிரசுரிக்கின்றோம். இவ்வாக்கம் தொடர்பாகவும், இவர்களின் பார்வை தொடர்பாகவும் சில விமர்சனங்கள் எமக்கு இருக்கத்தான் செய்கின்றது. இக்கட்டுரையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து வெளியிடுகின்றோம்.

சுமைகள்.

# ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு....

1.ஈழ விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளில் ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். இந்தத் தேக்கம் கீழ்கண்ட விதங்களில் வெளிப்படுகின்றது.

1.ராணுவ நடவடிக்கைகளில் ஒரு தேக்கம்.

2.முன்தளத்தில் ராணுவத்திற்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளி.

3.பின்தளத்தில் போராளி களுக்கும் மக்களுக்குமிடை யேயான இடைவெளி.

4.அமைப்புகளுக்குள் தனிநபர்வாதம், முரண்படுபவர்க ளைப் பழிதீர்க்கும் போக்கு போன்ற அராஜக நடவடிக்கைகள்.

ஈழ விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தத் தேக்கங்க ளிலிருந்து விடுபடுவது அவசியம். இதனைச் சாத்தியமாக்க முதலில் இந்தத் தேக்கத்திற்கான அடிப்ப டைக் காரணங்களை விளங்கிக் கொள்வது அவசியம்.

2. அடிப்படைக் காரணங்கள

1 அடிப்படைக் கோட்பாட்டுப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்காமை.

அ. இலங்கை அரசின் வர்க்கச் சார்பு.

ஆ. ஈழப் பிரச்சினையில் அமெரிக்க – ரசிய வல்லரசுகளின் பங்கு.

இ. இந்திய அரசின் வர்க்கச் சார்பும், ஈழ விடுதலையில் இந்திய அரசின் ''அக்கறையும்''

ஈ. ஈழ விடுதலைக்குப் பின் உருவாக்கப்போகும் அரசு பற்றிய கண்ணோட்டம்.

ஊ. மேற்கண்ட எல்லாவ ற்றிற்கும் அடிப்படையான விடுத லை இயக்கங்களின் உலகப்பார்வை பற்றிய இறுதி முடிவின்மை (வேறு வார்த்தை தகளில் சொல்வதென்றால் மார்க்சிய – லெனினியப் பார்வை யை நடைமுறைக்கோட்பாடாக ஏற்றுக் கொள்வது குறித்து).

எடுத்துக்காட்டாக ஈழ விடுதலைப் போரில் இந்திய அரசு, ரஷ்ய அரசு ஆகியவற்றின் ''அக்கறை'' பற்றிய தெளிவின்மையோடு முழுமையாக இந்திய அரசைச் சார்ந்து நின்றதனால் இன்று இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் பொருந்துகின்ற ஒரு ''தீர்வை'' இயக்கங்களின் மீது இந்திய அரசு சுமத்துவதனால் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை குறிப்பி டலாம். இதே போல மக்கள் யுத்தம் பற்றிய கோட்பாட்டுத் தெளிவின் மையால் முதலாளிய ராணுவக் கண்ணோட்டத்துடன் மக்களை அணுகி, மக்களிடமிருந்து அந்நியப் பட்டு நிற்கும் தன்மையினால் விளைந்த தேக்கத்தைக் குறிப்பிட லாம்.

. ஈழ விடுதலை அமைப்பக்கள் என்பன பேரினவாதத்திற் கெதிரான போர்க் குணமிக்க விடுதலை இயக்கங் களாகத் திகழும் அதே நேரத்தில் ஈழத்தில் சமூகப்படி நிலை வேறுபாடுகளை மறு உற்பத்தி செய்யும் கருவியாகவும் விளங்கும் தன்மை.

*விளக்கம்* – வர்க்கமாகப் பிளவுண்ட சமூதாயங்களில் அரசின் பணி வர்க்க வேறுபாடுகளைத் தக்க வைக்கும், பொருளாதார அமைப்பை மறு உற்பத்தி செய்வது. இந்த அமைப்பில் உருவாக்கும் நிறுவனங்கள் யாவும் வெளியில் நிலவும் படிநிலை வேறுபாடுகள் தொடரவே வழி வகுக்கும். ஆக்கிரமிப்பாளருக் கெதிரான போராட்டங்கள் என்பது கூட இந்தத் தன்மையிலிருந்து அமைப்புக்களை விடுவிப்பதில் லை.

ஈழ விடுதலை அமைப்புக் கள் அனைத்தையும் வர்க்க ரீதியாகப் பரிசீலிக்கும் போது அமைப்புக்களில் ஆதிக்கத்திலிருக்கும் அனை வருக்கும் வெளியி லுள்ள சமூகத்திலும் ஆதிக்க சக்திகளாக இருப்பவர்களும் அவர்களின் பிரதிநிதிகளுமேயாவர். சமூகப் படிநிலையின் அடிநிலையில் இருப்பவர்கள் இயக்கங்களில் வரும்போது அங்கும் அவர்கள் அடி நிலையிலேயே இருத்தப்படுகின்றனர். ராணுவ ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் இது நிலை நிறுத்தப்ப டுகின்றது.

இன்று நிலவும் ஆதிக்க அமைப்பில் 'தலைவர்கள்' எவ்வாறு உருவா கின்றார்களோ அப்படியே விடுதலை அமைப்புக்களிலும் தலைவர்கள் உருவாகின்றனர். மேலும் இன்றைய அமைப்பில் தலைவர்களின் செல்வாக்கு தக்க வைக்கப்படுவதற்கு என்னென்ன விதமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றவோ அவையே அமைப்புக்களிலும் கையாளப்ப டுகின்றன.

அமைப்பு, ராணுவம் முதலியனவும் முதலாளிய நிறுவனக் கண்ணோட்டங் களுடனேயே ஒழுங்கமைக்கப் பட்டுள்ள ராணுவத்தை எடுத்துக் கொள் வோம். முதலாளிய ராணுவம் என்பது வெளிநாட்டு ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பதற்காக மட்டுமல்ல. உள்நாட்டு ''ஆபத்து'' க்களிலிருந்தும் நாட்டைக் 'காப்பாற்றுவதற்காக'' உருவாக்க ப்பட்டுள்ளது. மக்களைப் பற்றிய அதன் கண்ணோட்டம் வெளி நாட்டு ஆபத்திலிருந்து காப்பாற் றப்பட வேண்டியவர்கள் என்பதும் ஆயுத பலத்தால் அடக்கப்பட வேண்டிவர்கள் என்பதுமாகும். எனவே முதலாளிய ராணுவத் திற்கும் மக்களுக்குமிடையே ஒரு பிளவு எப்போதும் தக்க வைக்கப்படும். இன்றைய ஈழ விடுதலை ராணுவங்களும் இத்தகைய கண்ணோட்டத்தையே தம் நாட்டு மக்களைப் பற்றியும் கொண்டுள்ளன என்பதற்குச் சான்றுகள் நிறைய உள்ளன. துவக்குகளுடன் ஜீப்புகளில் வேகமாக வருகின்ற விடுதலைப் போராளிகள் சிங்கள ராணுவத்தைப் போலவே மக்களின் அச்சத்திற்குப்

www.tamilarangam.net



ாத்திரமானவர்களாக உள்ளார்கள் என
ழ மக்கள் பலரும் கூறக் கேட்டிருக்கின்றேன். வேதாரணியம் ம்பவங்களும் இதற்கோர் ான்றாகும்.

'எங்கள் மக்கள் பலர்
அச்சத்துடனேயே பாதையில்
டக்கிறார்கள்
ஆமிக்காரருக்கு மட்டும் அஞ்சியல்ல !
ங்கள் போராளிகள் ஓட்டும்
ாகனங் களின் வேகத்திற்கும்
அஞ்சித்தான்.''

ன ஓர் ஈழக் கவிதை ஒன்றும் மீபத்தில் படித்தேன்.

மக்கள் விடுதலை ராணுவம் என்பது மக்களைச் சார்ந்து, மக்கள் ம்பிக்கைக்குரியதாக மக்களிட ிருந்து பொருள், ஆயுதம் முதலியவற்றை விரும்பிப்பெறுவதாக இருக்க வேண்டுமல்லவா?

அதேபோல் மக்கள் விடுதலை ராணுவத்திற்குள், அதிகாரிக ளுக்கும் அடிமட்ட வீரர்களுக் கிடையே ஒரு சமூக வேறுபாடு (social division) இருப்பதில்லை. முடிவுகளை டுப்பதில் அடிமட்ட வீரர்களுக்குப் ங்கில்லை என்பதும் மேல்லமட்ட உத்தரவு கட்குக் கண்மூடித்தன ாகக் கீழ்படிவதே அவர்களின் வேலை என்பதும் முதலாளிய ராணுவக் கண்ணோட்டம். தனியான உடை, தனியான வாழ்க்கை வசதிகள், தனியான உணவருந்தும் இடம் ஆகியவற்றின் மூலம் அதிகாரிகள் முதலாளிய ராணுவத்தில் திட்டமிட்டே வீரர்களிடமிருந்து பிரிக்கப் படுகின்றனர். இருவருக்கு மிடையில் அச்ச உறவே நிலவுகின்றது. ஈழ விடுதலை ராணுவங்களுக்குள்ளும் இத்தகைய நிலையே காண்கின றோம். ஒரு கமாண்டர் வீரர்களுக்கு முன்சிகரெட் பிடிக்கலாம், ஆனால் ஒரு வீரர் கமாண்டருக்கு முன் சிகரெட் பிடித்தால் கடும் தண்டனை உண்டெனச் சில நாட்களுக்கு முன்பு அமைப்பைச் சேர்ந்தவர் குறிப்பிட்டார். ராணுவத்தில் மட்டுமின்றி இதர அரசியல், நிர்வாக அமைப்புகளிலும் இந்நிலையே காணப்படுகின்றது.

3.சுத்தராணுவக் கண்ணோட்டம் — அரசியலமைப்பு, பிரச்சார அமைப்பு ஆகியவற்றைக் காட்டிலும் ராணுவ அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பது. அரசியலமைப்பை ராணுவ அமைப்பிற்குக் கீழாக கொண்டு வருவது.

4.லும்பன் சித்தாந்தங்களும், குட்டிப்பூர்சுவாச் கலந்த அராஜகப் போக்கு அமைப்புக்குள் நிலவுவது.

5.தம்மைவிடப் புரட்சிகர சக்திகளும் முக்கியமானவர்களும் இல்லை என்கிற குட்டி முதலாளியக் கண்ணோட் டத்தின் விழைவாக பலத்தைச் சேமித்தல் என்கிற பெயரில் ராணுவ நடவடிக்கைகட்கு முட்டுக்கட் டை போடுதல்.


6.மேற்கண்ட காரணங்கள் அனைத்திற்கும் மூலாதாரமான காரணத்தை அமைப்புக்களின் வர்க்கக் கூட்டில் (class compariition) தேடவேண்டும்.

வர்க்கம் —வெளியிலுள்ள சமூகப் படிநிலைகள் அமைப்பிற்குள்ளும் பேணப்படுகின்றன என முன்னர் குறிப்பிட்டோம். வெளியிலுள்ள ஆதிக்க சக்திகள் தவிர முதலாளிகள், குட்டி முதலாளிகள், குட்டி முதலாளிய அறிவு ஜீவிகள், பாட்டாளி வர்க்கம் லும்பன்கள் ஆகியோர் இன்று விடுதலை அமைப்பிற்குள் பெரும்பா ன்மையாக இருந்து வருகின்றனர். அமைப்பிற்குள்ளிருக்கும் இளைஞர் களின் தியாக சிந்தனையையும், போர்க் குணத்தையும் குறைத்து மதிப்பிடாத அதேநேரத்தில் இன்றுள்ள பொருளாதாரத் தேக்கத்தினாலும், பாதுகாப்பின் மையாலும் ஏராளமான இளைஞர்கள் போதிய உணர்வுகளின்றி அமைப்புகட்கு வந்துள்ளதையும், உதிரிப்பாட்டாளிகள் எனப்படும் லும்பன்கள் ஏராளமாக அமைப்பிற்குள் வந்துள்ளமையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களாகும். மேலும் தேசிய இனப்பிரச்சினை முற்றுவதற்கு முன்னரே இலங்கையில் அரைக் காலனியக் கலாச்சாரச் சீரழிவுகள் உச்சமடைந்து பாட்டாளி வர்க்கத்திடம் பாட்டாளி வர்க்க உணர்வை மழுங்கடித்து அவர்களைப் போர்க்குணமற்ற அமைப்பு விசுவா சிகளாக ஆக்கி வைத்திருந்த தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே அமைப்பிற்குள் கீழ்க்கண்ட வர்க்கங்களை நாம் காணலாம்.

பெரும் தமிழ் முதலாளிய சக்திகள்
குட்டி முதலாளிய சக்திகள்
குட்டி முதலாளிய அறிவு ஜீவிகள்
லும்பன் சக்திகள்
பாட்டாளி வர்க்கம்.

பெருந் தமிழ் முதலாளிய சக்திகள் அமைப்பிற்குள் ஆதிக்கம் செலுத்துகின்றன. போதிய வர்க்க உணர்வில்லாத பாட்டாளி வர்க்கம் முதலாளிய சக்திகளுக்கு விசுவாச மாக இருக்கின்றது. எனினும் விடுதலைப்போராட்டத்தில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை இது கவலையுடன் ஆராயத் தொடங்கியிருக்கின்றது. குட்டி முதலாளிய சக்திகளும் லும்பன் சக்திகளும் அமைப்பிற்குள் தனிநபர்வாதப் போக்கிற்கும், சந்தர்ப்பவாதற்திற்கும், இவற்றின் விளைவாக அராஜகத்திற்கும், அமைப்பிற்குள் கலாச்சாரச் சீரழிவு, கள்ளக்கடத்தல் மூலம் பொருள்சேகரித்தல் போன்றவற் றிற்கும், காரணமாகின்றன. அறிவு ஜீவிகள் முழுமையான விடுதலை வேட்கையும் உணர்வும் உடையவர்களாக இருந்தாலும் அமைப்பைக் கையாள்வதிலுள்ள குறைபாடுகளினாலும் அமைப்பின் முதலாளியத் தன்மையினாலும் அன்னியப்பட்டு ஒதுக்கப்படும் நிலைக்குள்ளாயினர். பலர் ஒதுக்கப பட்டனர். எனினும் அமைப்பிற்குள் இருக்கும் இவர்களே இன்று ஒரு ஆரோக்கியமான உள்கட்சிப் போராட்டத்தைத் தொடங்கும் நிலையிலுள்ளனர்.

லும்பன் வர்க்கத்தையும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரையும் சந்தர்ப்ப வாதிகள் எனவும், அராஜக வாதிகள் எனவும் கூறத்தேவையில்லை. லும்பன் போக்கும் ,குட்டி முதலாளித்துவ போக்குமே இவ்விரண்டுக்கும் காரணம் என்ப தே இதன் போருள் நேர்மையான விசுவாசத்துடன், நேர்மையான விடுதலை ஆர்வத் துடன் கூடப் பலர் இந்தப் போக்க'ற்கு, இதுவே சரி என்கின்ற விசுவாசத்தோடு ஆட்பட்டுள்ளனர். இதே போல வர்க்க உணர்வு வாய்க்கப் பெறாத பாட்டாளி வர்க்கம் அனைத்தையும் உடனடி யாகப் புரட்சிகரச் சக்திகள் எனக் கூறத் தேவையில்லை. எனவே கீழ் கண்டவாறு இவர்களை வகைப்ப டுத்தலாம்.




7. அணிகளுக்கு உலகக் கண்ணோட்டம் (தத்துவக்) கல்வி இன்மை. இது உலகக் கண்ணோட்டம், வழிகாட்டும் தத்துவம் ஆகியவை பற்றிய தெளிவின்மையோடு இணைந் ததாகும், வழிகாட்டும் தத்துவம் பற்றிய பிரச்சனைக்கு முடிவு கட்டிய பின்னரே அதனைப் போதிப்பது பற்றிய பிரச்சனை எழுவதால்.

(அடுத்த இதழில் தொடரும்)

***

# எது? மூன்றாவது பாதை

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப்போராட்டம், இன்றைய நிலையில் பிரிந்து போகும் உரிமையையும், அங்கீகரித்து முன்னெடுக்கும் ஆயுதப் போராட்டமாகும். கடுமையான தேக்க நிலைக்கும், பல புதிய திசை விலகல்களுக்கும் உள்ளாகியுள்ளது. சிறிலங்கா சிங்களப் பௌத்த பேரினவாத அரசின் தேசிய ஒடுக்கு முறை யுத்தம் எல்லாத் திசைகளிலும், நாளுக்கு நாள் தீவிரப்படுத்தப்படுகிறது. அதேவேளை அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டப் பாதையைக் கைவிட்டு, பாராளு மன்றத்தின் மூலமும், பேச்சுவார்த்தை மூலமும் தீர்வு காணும் கனவில் திசைமாறிய, தேசிய ஒடுக்கு முறைக்கு மறைமுகமாக உதவும் ஆயுதக் குழுக்கள், துரோக அரசியல் கட்சிகள் ஒருபுறம். தமிழ் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக, அரசுடன் போரிடும் தமிழ் முதலாளித்துவ சக்தியான ''விடுதலைப் புலிகள் இயக்கம்'' மறுபுறம், புலிகள் தேசியப் போராட்டத்தில் தமிழ் முதலாளித் துவத்தின் அனைத்துப் பிற்போக்குத் தனங்களின், தனி ஆதிக்க சர்வாதிகாரப் ''பாசிச'' போக்கின் மையமாகவும் விளங்கிக் கொண்டிரு க்கின்றனர். இத்தகு சூழ்நிலையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு குழப்பகரமான நிலையில் உள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறுமா? இதை யாரால் செய்ய முடியும்?' என்ற கேள்வியும் (?) அச்சமும், அரைகுறை நம்பிக்கையும், போராட்டத்தின் மேலும், மக்களின் மீதும் அக்கறை கொண்டவர்கள் வாழும் எல்லாத் தளங்களிலும் (இலங்கை இந்தியா மற்றும் வெளிநாடுகளில்) இப்பிரச்சனை சிந்திக்கத் தூண்டுகிறது, விவாதிக்க ப்படுகிறது, பிரசுரிக்கவும் படுகிறது. தமிழீழ மக்களின் புரட்சிகரமான தேசியக் கோரிக்கைகளையும் – மக்களின் சனநாயகக் உரிமைகளையும் முரணற்ற விதத்தில் ஒன்றிணைத்து, வழிகாட்டும் தகமையுள்ள முன்னேறிய அரசியல் பாதையும், அதன் வழியில் கட்டப்பட்ட போராட்டமும் திறனுள்ள மக்கள் இயக்கமும், இப்போராட்டப் பாதையினை தீர்மானிக்கும் சக்தியாக மாற வேண்டும் என்பது பொதுவாக தமிழீழ தேசிய சுதந்திரத்திற்கும் – மக்களின் சனநாயக உரிமைக்கும் ஆக சிந்திக்கின்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அத்தகைய முன்னேறிய அரசியல் பாதையை, அதன் வழிகாட்டும் அமைப்பு மார்க்கத்தை எத்தகைய தத்துவம் மிக மிகச் சிறப்பாக முன்வைக்கிறது என்பதில் மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனைத் தத்துவம் தான் புரட்சிகர அரசியல், அமைப்பு மார்க்கத்தை முன்வை க்கின்றது. ஏனெனில் முன்னேறிய வர்க்கமானது தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் விவசாயிக ளினதும் பரந்துபட்ட பெரும்பான்மை உழைக்கும் மக்களின் சார்பாகவும் தேசியப் போராட்ட த்திலும் வர்க்கப் போராட்டத்திலும் சரியான கொள்கை களை முன்வை க்கிறது. பின் தங்கிய நாடுகளின் தேசிய, வர்க்கப் போராட்டங்களில் மக்களின் சன நாயகப்புரட்சியை நிறைவு செய்து ஒரு சமத்துவ சமூகப் புரட்சிக்கு (சோசலிசப்புரட்சிக்கு) செல்லும் மனித வரலாற்று வளர்ச்சிக்கு இது உத்தரவாதம் அளிக்கின்றது. எனவே இந்த புரட்சிகர தத்துவ வழியில் உருவாக்கப்படும் அரசியல் வழியும், யுத்தப் பாதையும் பொதுவுடமைக் கட்சியும், அதன் தலைமை வழிகாட்டலில் நிறுவப்படும் பலமிக்க ஐக்கிய முன்னணி, மக்கள் இராணுவம் இவை தான் தமிழீழ தேசிய விடுதலைப்

www.tamilarangam.net



போராட்டத்தின் இன்றைய தேக்க நிலையை உடைக்கும். திசை விலகல்களை திருத்தி சீரமைக்கும். இதன் மூலம் சிறிலங்கா இனவாத அரசையும் அதனுடன் சேர்ந்து நிற்கும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து முன்னேறும் அரசியல் போராட்டப் பாதையில் வெளிச்சத்தை நமக்குத் தரும். பிரதான எதிரிக்கு எதிராக பரந்துபட்ட மக்களையும் புரட்சிகர வர்க்கங்களையும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனது தலைமையில் இறுதி இலட்சியத்தில் திசை விலகலின்றி வழி நடத்திச் செல்வதற்கான உறுதியின் அடித்தளமாகும். இவற்றின் மூலம் மட்டும் தான் தமிழீழ தேசியக் கோரிக்கையுடன் மக்களின் சனநாயகக் கோரிக்கைகளை முரணற்ற விதத்தில் ஒருங்கிசைவான முறையில் இணைந்து, தமிழீழ தேசிய விடுதலைப் புரட்சிப் போக்கை வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்லவும், இலங்கை மக்களின் சனநாயகப் புரட்சியை வளர்க்கவும் நடைமுறையில் போராட்டத்தில் – புரட்சிகர சக்திகள் தீர்மானகரமான சக்தியாக மாறவும் வழிபிறக்கும்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தில் வழியாக வளர்ந்து வரும் மார்க்சிய – லெனினச சக்திகளும், ஒரு 'புரட்சிகர கட்சியை' கட்ட வேண்டிய தேவையை நன்குணர்ந்துள்ளார்கள். தத்துவார்த்த ரீதியில், அரசியல் அமைப்பு நிலையில், போராட்டங்கள் செயல்பாட்டளவில் இதை எவ்வாறு காரிய சாத்தியமாக்குவது என்பதில் எல்லாவித சிக்கல்களை முகங் கொடுக்கின்றார்கள். இதை காரியச் சாத்தியப்படுத்துவது மிக மிகக் கடினமானது. பல தியாகங்களை வேண்டி நிற்பது. ஆனால் இதை விட வேறுக்குவழி எதுவும் இன்று போராட்டம் சந்தித்துள்ள தேக்க நிலையை உடைத்து புரட்சிகரமான பாதையில் முன்னேற வழி விடாது. இவ்வாறு புரட்சிகரமான கட்சியைக் கட்டுவது, தினமும் உச்சரிப்பதன் மூலம், அழகாக எழுதி வீடுவதால் சாதிக்கப்படுவதல்ல. இது உணர்வு நிலையில் முதல் படி மட்டுமே.

மார்க்சிய – லெனிய மாவோ சிந்தனை குறித்து, அடிப்படை புரிதலும் இன்றைய சர்வதேசிய, தேசிய பொருளாதார அரசியல் கட்டுமானங்கள், அரச அமைப்பு முறைகள், சமுதாய முரண்பாடுகள் அவை வெளிப்படும் விதங்கள் வர்க்க அரசியல் போராட்ட சக்திகளின் அணி சேர்க்கைகள், இவற்றின் மீது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணி சக்திகளது பார்வை, அணுகுமுறை, இறுதி இலட்சியத்துக்கு இசைவான முறையில் தனித்துவம் மிக்க பாத்திரத்துடன் போராட்டத்தில் தீர்மானகரமான தலையீடு இவை குறித்து தத்துவார்த்த அரசியல் தெளிவும், குறிப்பாக இலங்கை சமுதாய வளர்ச்சிக் கட்டம், தேசிய இன முரண்பாடுகளின் தோற்றுவாய், வளர்ச்சி, சமகாலம், போராட்ட சக்திகள் பற்றிய மதிப்பீடு, இன்று தொழிலாளி வர்க்கம் தனது சமுதாயக் கடமையை எங்கிருந்து தொடங்குவது, இவை பற்றிய உயர்ந்த பட்சபுரிதலுடன் தீட்டப்பட்ட ஒரு 'அரசியல் திட்டத்தின்' மேல் நாம் வாழும் தளங்களில், போராட்டத்தின் நேரடிச் செயற்பாடுகள் மூலம், பங்களிப்புகள் வழியாக அரசியல் திட்டத்தையும் தங்களையும் புடம் போட்டு வளர்த்து வருபவர்களின் ஒன்றுபட்ட மையக் கட்சி இருக்க வேண்டும். இத்தகைய ஒரு புரட்சிகர அரசியல் திட்டத்தை உருவாக்கவும், அதை செயற்படுத்துவும் தயாராகவுள்ள புரட்சிகரமான முன்னணிப் போராளிகள் ஒன்று படுவதன் மூலம், புரட்சிகர அரசில் கட்சியைக் கட்ட முடியும். இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுவதை காரிய சாத்தியப்படுத்த அரசியல் தெளிவுடன் கூடவே உறுதியான சக்திகளை வேறுபடுத்துவதே நமது பிரதான பணியாகக் கருத வேண்டும். இது எவ்வளவு தீவிரத்துடன் நடைமுறைக்கு வருகின்றதோ அப்போது போராட்டத்தில் பிரகாசமான வெளிச்சம் தெரியும்.

இந்த மாபெரும் கடமை இன்று பல காரணங்களால் பல தளங்களில் சிதறுண்டு இருக்கும் தமிழீழ, சிறிலங்காத் தேசங்களின் புரட்சிகர இயக்கத்தின் முன்னணிச் சக்திகளால் முயற்சிக்கப்பட்டு வருகிறது. தமது புரிதலுக்கும் சக்திக்கும் ஏற்ப அந்த பிரதான பணிக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். ஒரே பணியை தமது தோள்களில் சுமந்து கொண்டு பல தளங்களில் வாழும் இவர்கள் தமக்கிடையில் கருத்தறிதலை, கொள்கை ரீதியான உறவை ஒன்றுபடும் அல்லது முரண்படும் போக்கை தெளிவாக்கும் திசையில் வளர்கிறார்கள். கருத்து நிலையில் ஒன்று படும் சக்திகள் நடைமுறையில் ஆரோக்கியமான உறவுகளை வளர்த்து கூட்டு வேலைகளை நோக்கி ஒன்றுபட வேண்டும்.

தமிழீழ மக்கள் முகங்கொள்ளும் யுத்தத்தின் கொடுரம், துன்பங்கள், தொல்லைகள், இழப்புகள், இயக்கங்களின் அராஜகங்கள், சனநாயக உரிமை மீறல்கள் இவற்றை எல்லாம் எழுதுவது, உலகறியச் செய்வது அவசியம். இது சமுதாய வாழ்வின் அன்றாட நிலவரங்களை வெளியீடும் செய்தி நிறுவனங்கள் தத்தமது வர்க்கக் கண்ணோட்டத்தில் இருந்து வெளியீடுபவர்கள். இது எவ்விதத்திலும் மக்கள் சந்திக்கும் எந்தப் பிரச்சனையையும் தீர்த்து விடுவதற்கான சிந்தனையைத் தூண்டுவதில்லை. தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு காரணமான இனவாத அரசை, அதன் ஏகாதிபத்தியக் கூட்டாளிகளை, இயக்கங்களின் · குறிதவறும் சிந்தனைகள், செயல்களை அடையாளம் காட்டி மக்களுக்கு எதிரிகள் எனக் காட்டி அதற்கு தீர்வைக் கூறுவது மக்கள் சக்தியை தட்டி எழுப்புவது திசைமாற்றம் நிலைகள் ஒருபக்கம் அடுத்து கட்டம் இதற்கு மேல் மக்களின் பிரதான எதிரியைத் தனித்து அடையாளம் காட்டியும், அரசுடன் மோதும் அதே வேளை மக்களின் சனநாயக உரிமைகளை மதிக்காத சக்திகளை, திசை தவறும் இயக்கங்களை விமர்சனத்துடன் சுட்டிக்காட்டியும், மொத்தத்தில் தமிழீழ மக்கள் முன் ஒரு புதிய புரட்சிகர அரசியல் இயக்கத்தின், புதிய நடவடிக்கைகளின் தேவையை உணர்த்தி ஒரு இதழ், பத்திரிகை, கட்டுரை, கவிதை, சிறுகதை எனப் பிரசுரித்தால் இது சமுதாய அவலங்களை சுட்டிக்காட்டி தீர்மானிப்பதற்கான சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் மிகமிக முன்னேறிய நிலை, ஆனால் இங்கே தான் புதிய எழுதுகோல்கள் மக்களின் இருட்டான வாழ்வை கிழித்து வெளிச்சத்தை காட்டும் புதியபுரட்சிப் பாதையையும் திறக்கும். புதிய எழுதுகோல்களும் திசை விலகினால் மக்களை மீண்டும் இருட்டுக்கும் அழைத்துச் செல்லும். புதிய திசை விலகலையும் ஏற்படுத்தும். கடந்த கால போராட்டத்தில் விலை மதிப்பில்லா அனுபவங்களையும்

www.tamilarangam.net



ஏட்டறிவை, பட்டறிவை சுமந்து வந்து நின்று புதிய பாதை (மூன்றாவது பாதை) தேடும் சக்திகள் மக்களின் இருட்டான வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்தும் சக்தி பெற்ற அரசியல், அமைப்பு பாதையை நோக்கி தெளிவுடன் சுவடுகளைப் பதிக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் சமகால போராட்ட நிலவரம், அதன் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும், வெளிப்படுத்தும் சுதந்திரம் புலிகளைத் தவிர மற்றவர்களுக்கு புலிகளால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மாற்றுச் சிந்தனைக் கருத்துக்கள், நிலைப்பாடுகள், தமிழீழத்துக்கு வெளியில் தான் முன்வைக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது.

தமிழீழ மக்களின் பக்கத்தில் இருந்து மேற்கூறிய போக்குகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும் இதழ்கள், பத்திரிகைகள் தமிழ் மொழியில் பெருமளவில் தமிழீழத்துக்கு வெளியில் சிறிலங்காவில் ஒன்றிரண்டு தவிர குறிப்பாக அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வெளிவருகின்றது. இவற்றுள் புலி எதிர்ப்பு, புலி ஆதரவு ஒருவகை. திசைமாறிய இயக்கங்களின் பின்னணிப் பத்திரிகைகள் இன்னோர்வகை. இவை சில கலகலப்பான விளம்பரங்களுடன் தமது கண்ணோட்டத்தை முன்வைக்கின்றன. இவற்றை விடுத்து தமிழீழத்தவர் வாழும் ஒவ்வொரு அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் ஒரு இதழ் ஆவது தமிழ்மக்களின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு போராட்ட தேக்க நிலையைச் சுட்டிக்காட்டி இதற்கான காரணங்களை ஆராய்ந்து, பிரச்சனைகள் தலைக்கு மேல் என சொல்லி அதைத் தீர்பதற்கான வழியாக 'மூன்றாவது பாதை' ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என முன்வைக்கின்றது.

இப்படி முற்போக் சனநாயக கருத்துக்களை தாங்கிவரும் அரசியல், கலாச்சார இதழ்களின் ஆசிரியர் குழு முதல் பக்கத்தில் மூன்றாவது பாதை உருவாக்குவது, வளர்ப்பது பற்றி அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பான சில கட்டுரைகள் சிறந்த விவாதப் போக்கை வெளிப்படுத்தி உள்ளது. இது அந்தந்த வெளியீடாளர்களுக்குள்ளாக ஓடுகின்ற ஒரு புதிய அரசியல் பாதையின் தேவை, தன்மை குறித்து பிரக்ஞையை காண்பிக்கின்றது. இதுபோன்ற முயற்சிகள் மிகவும் வரவேற்கப்பட வேண்டும், ஆதரவளிக்கப்பட வேண்டும்.

மூன்றாவது பாதை உருவாக்கி வளர்ப்பது பற்றி தேடலுக் கூடாக வெளிப்படும் திசை விலகலை கவனிக்கும் முன், எது மூன்றாவது பாதை? என்பதை, அதை எப்படிப் புரிந்து கொள்கிறோம்? என்பதை தெளிவுபடுத்திக்கொள்வது நல்லது. இலங்கையின் இன்றைய அரசியல் சாசனத்தையும், அதன் மேல் கட்டுப்பட்டுள்ள அமைப்பு முறையையும் (இன அடக்கு முறைக்கான சரத்துக்களை உள்ளடக்கியதும் தேசிய இனங்களின், சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பை சுதந்திரத்தை உத்தரவாதப் படுத்தா சரத்துக்களை கொண்டதும்) இதில் ஆளும் அதிகாரத்துக்கு செயல்படுத்துவதற்கான வழியாக பாராளுமன்றப் பாதையையும், ஏற்றுக் கொண்டுள்ளதும், ஏகாதிபத்திய சார்புக் கொள்கையின், பிராந்திய விரிவாதிக்க அரசு சார்பை பெற்றுள்ள தமிழ் முஸ்லீம், தரகு முதலாளித்துவ அரசியல் கட்சிகள், இவர்கள் பலருக்கு தனியான ஆயுதக் குழுக்களும் உண்டு. ரி.யூ.எல்.எப் தொடக்கம் ஈ.பி.டி.பி வரை. இவர்கள் சிறிலங்கா அரசின் தமிழின ஒடுக்கு முறை யுத்தத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவுபவர்கள். சில சமயங்களில் சில விவகாரங்களில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார அரசியல் பேரங்களுக்காக அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பவர்கள். புலிகளின் பாசிச நடவடிக்கைகளைக் காட்டி தமிழ் மக்களின் பிரதான எதிரியான சிறிலங்கா அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டில், யுத்தத்தில் அரசுக்கு சேவகம் செய்யும் துரோக நிலைப்பாட்டினை மக்களுக்கு வழங்குபவர்கள். இவர்கள் புலிகளை மட்டுமல்ல தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளுக்கும், போராடும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளுக்கும் வேட்டு வைப்பவர்களும் கூட இவர்கள் முதலாவது பாதையினர்.

அடுத்து தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கை பக்கம் நின்று யுத்தம் அரசுடன் நடத்தும் தமிழ் முதலாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதியாக போராட்ட சக்தியாக இருக்கும் 'விடுதலைப் புலிகள்' இவர்கள் திட்டவட்டமாக ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை அற்றவர்கள். தங்களைத் தவிர மற்றைய வர்க்க சக்திகளை செயற்பட மறுப்பது மட்டுமல்ல, தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதியாக நினைத்து செயற்படும் தனியாதிக்க 'பாசிச' சக்தியாகும்.

இவர்கள் தமிழ் தேசிய இன மக்களுக்கும் சிறிலங்க அரசிற்கும் இடையிலான முரண்பாட்டை தமிழ் முதலாளி வர்க்கத்தின் பக்கம் நின்று போராடுவதால் ஒரு தேசிய சக்தியாக தன்னைப்போராடும் வரை அடையாளம் காட்டும். அதேவேளை பரந்து பட்ட தமிழ், முஸ்லீம் மக்களின் சனநாயக உரிமைகளை, போராடும் தேச பக்த சனநாயக சக்திகளை ஒடுக்கிய வண்ணம், தேசியப் போராட்டத்தில் தமிழ் முதலாளி வர்க்க 'பாசிச' ஆட்சி அதிகாரத்தைக், தேசிய யுத்தத்தில் சிந்தப்படும் உதிரத்தின் மூலம் நிலை நிறுத்த முற்படுகிறது. இது எவ்வாறு இருப்பினும் சிறிலங்கா அரசுடன் போரிடும் வரை தமிழ் தேசியத்தின் பக்கம் தன்னை இனங்காட்டும். இது இரண்டாவது பாதை.

மூன்றாவது பாதை, இது இன்று நடைமுறையில் தமிழீழ அரசியல் போராட்ட அரங்கில் தாக்கம் செலுத்தாத பாதை. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை, இன்று பிரிந்து போகும் நிலையை முன்வைத்து, மத, மொழி (முஸ்லீம், மலையக) சிறுபாண்மை மக்களின் சுயாட்சி அமைப்பை ஏற்றும், தமிழீழ தேசியக் கோரிக்கையுடன் மக்களின் சனநாயகக் கோரிக்கையையும் இணைத்துக் கொள்ளும் பரந்து பட்ட தமிழீழ மக்களின் அரசில் போராட்ட பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தும் புரட்சிகர தேசபக்த அய்க்கிய முன்னணியாக விளங்கும் சக்தி. இது சிறிலங்கா அரசுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்கும் போராட்ட சக்திகளுடன் மேல் இருந்து கட்டப்படும் அய்க்கிய முன்னணிக் கொள்கையைப் பின்பற்றும், அதேவேளை பிரதான எதிரிகளுக்கு எதிரான இலங்கையின் ஏனைய போராட்ட முனைகளின் (சிறிலங்கா, மலையக) சக்திகளுடன் ஒன்றிணைந்து போராடும், உலகளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் போராட்டத்திற்கு ஆதரவை மனப்பூர்வமாக வளங்கும். தமிழீழ தேசிய

www.tamilarangam.net



விடுதலைப்போராட்டத்தை புரட்சிகரப் பாதையில், தொழிலாளி வர்க்கத் தலைமையில் முன்னெடுக்கும் புரட்சிகர தேசபக்த மக்களியக்கப் பாதையாகும்.

இனி மூன்றாவது பாதை பற்றி தேடலுக்கூடாக வெளிப்படும் திசைவிலகலைப் கவனிப்போம். முதலாவது, 'மூன்றாவது பாதை, மூன்றாவது பாதை' எனக் கூறிக் கொண்டு ஒரு 'பாட்டாளி வர்க்கக் கட்சியை' கட்டுவது பற்றியோ, அதன் தலைமையின் கீழ் அய்க்கிய முன்னணியை, மக்கள் இராணுவத்தை உருவாக்குவது பற்றி எந்தவிதமான கருத்து வெளிப்படுத்தலும் செய்யாது அடிப்படையில் மார்க்சிய – லெனினிய – மாவோ சிந்தனை தமது வழிகாட்டும் தத்துவம் என்பதைக் கூட முன்வைக்காத நிலையில், மூன்றாவது பாதை உருவாக்க வேண்டும் எனக் கூறுவதன் மூலம், தாங்கள் எந்த விதமான வர்க்க அரசியல் அமைப்பைக் கட்டவுள்ளனர் என்பதை யோ வெளிப்படுத்தாத போக்கு குறைந்தது கடந்த கால அனுபவங்களைத் தொகுப்பதிலும், விமர்சன பூர்வமாக அணுகுவதில், சமகால அரசில் போக்கில் தொளிவுபடுத்துவதில், எதிர்கால வழியைக் கண்டறிவதில் மார்க்சிய, லெனினிய அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதைக் கூட தெளிவுபடுத்தாத நிலை. இது ஒரு வகை.

அடுத்து பாட்டாளி வர்க்க சிந்தனையை ஏற்றுக் கொண்டு புரட்சிகரக் கட்சியைக் கட்ட வேண்டும் என வலியுறுத்துபவர்கள் மத்தியிலும், சிலர் கடந்த காலத்தில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அது பிரிந்து போகின்ற நிலையை முன்வைப்பதும் சரி என அங்கீகரித்து அதனடிப் படையில் செயற்படுபவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறு முதலாளிய சந்தர்ப்ப வாத மார்க்சிய இயக்கங்களில் மார்க்சிய பாதையை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தவர்கள்.

இவ்வியக்கங்களின் உடைவுகள் சிதறல்களால் அதிலிருந்து வெளியே வந்தவர்கள். தமிழீழ போராட்டததில் ஏற்றபட்ட தேக்க நிலை காரணமாகவும், இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தின் பின்பான மாற்றங்களாலும் இன்று இவர்கள் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவும் பிரிந்து போகின்ற கோரிக்கை என்பது முதலாளித்துவ தேசியவாதக் கோரிக்கை என்ற நிலையை எடுத்து அய்க்கிய இலங்கைப் புரட்சிதான் சாத்தியமானது. தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராடுவது மட்டுமே தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கோரிக்கை என வாதிடுபவர்கள். இவர்களின் தமிழீழக் கோரிக்கையை அதன் தொடக்க காலத்தில் முதலாளித்துவ தேசியக் கோரிக்கை என முடிவு செய்கிறார்களா? அல்லது சிறு முதலாளித்துவ சந்தர்ப்ப வாத மார்க்சிய தேசிய இயக்கங்களின் தோல்விகள் – தேக்க நிலையில் இருந்தும், புலிகளின் பாசிசப் போக்கிற்குப் பின்னால் அத்தகைய நிலைப்பாட்டிற்கு வருகிறார்களா என்று தெரியவில்லை. அய்க்கிய இலங்கை புரட்சி பற்றி பேசி, தேசிய இன முரண்பாட்டின் பிரதான நிகழ்ச்சிப் போக்கை காணத்தவறி அரசியல் அரங்கில் இருந்து ஒதுக்கப்பட்ட பழைய புகலிட மார்க்சியர்கள் சிலர் இவர்களுடன் சேர்ந்து இப்போது சூடாக மீண்டும் இத்தகைய 'புதிய அய்க்கிய இலங்கை' புரட்சி பற்றி பேசவும் எழுதவும் முன்வந்துள்ளார்கள். தமிழீழப் போராட்டத்தில் எந்த புரட்சிகர இடது சாரி இயக்கமும் அற்ற நிலையில் இவர்களும் மூன்றாவது பாதை பற்றியே முன் வைக்கின்றார்கள். தமிழீழ தொழிலாளர் வர்க்கம் இலங்கையின் சூழ்நிலையில் இனமுரண்பாட்டின் வேகம், இதன் பிரதான நிகழ்ச்சிப் போக்கு இன்னும் தீவிரமடைந்துள்ள நிலையில் பிரிந்து போகும் கோரிக்கையைக் கைவிடும் அளவிற்கு இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படாத நிலையில் தனது கோரிக்கையைக் கைவிட்டு அய்க்கிய இலங்கை புரட்சிப்பாதைக்கு மீண்டும் செல்வதானது புரட்சிகர மார்க்கத்தை தேடுவதற்கு, இயக்கத்தை கட்டுவதற்கப் பதில் ஒரு திசைவிலகலாகவே அமையும்.

தமிழீழ தொழிலாளி வர்க்க முன்னணி சக்திகள் மத்தியில் நிலவும் தமிழ் குறுந்தேசிய வாதப் போக்கை விமர்சிக்கவும் தேவையானால் கண்டிக்கவும் செய்யலாம், ஆனால் பிரிந்து செல்லும் உரிமையை மறுத்து அய்க்கிய இலங்கை புரட்சி பற்றிய நிலைப்பாட்டுக்கு செல்வது சரியான தீர்வாகாது. தமிழீழ பிரிவினைக் கோரிக்கையை எதிர்க்கும் இவர்கள் மத்தியில் இன்னும் ஓர் கருத்தும் வெளிப்படுகிறது. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் இவர்கள் தமிழ் மக்களின் தேசிய எல்லையை வரையறுப்பதும், வரைவதும் கூட ஒரு 'முதலாளித்துவ தேசியவாதம்' என கூற முற்படுகின்றனர். அப்படியானால் தேசிய இனங்களின் பாரம்பரிய பிரதேசங்களின் எல்லையை வரையறுப்பு செய்யாத அல்லது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் அதன் எல்லையை வரையறுத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ளாத ஒரு சுயநிர்ணய உரிமை பற்றி இவர்கள் பேசுகிறார்கள். இது மிகவும் எச்சரிக்கையுடன் கவனிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் இனவாத அரசால் ஆக்கிரமிக்கப்பட்டு அத்துமீறல் குடியேற்றங்கள் நில ஆக்கிரமிப்புகள் தேசிய இன ஒடுக்கு முறையின் பிரதான வெளிப்பாடாகக் காண்கின்ற நமது நாட்டில் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வில், அது பிரிவினையை ஒருக்கால் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரியப் பிரதேசத்தின் ஒருமைப்பாட்டை, உறுதிப்பாட்டை பேண வேண்டுமானால், தேசிய எல்லையை வரையறுப்பது தவிர்க்க முடியாது என்பதை உணர வேண்டும்.

இறுதியாக, தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்காகவும், பிரிவினைக்கும் கூட கடந்த காலங்களில் போராடியவர்களில் சிலர் இன்று பிரிவினையை நிராகரித்து தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்று மேற்கூறிய திசைவிலகல் பாதைக்கு சென்றுள்ளதுடன் மேலும் ஆபாத்தான நிலைப்பாட்டையும் முன்வைக்கின்றார்கள். இவர்கள் ட்ரொட்கிய வாதப் பாதையை இப்போது முன்வைக்கின்றார்கள். நான்காவது அகிலக் கூட்டத்தாருடன் சுறுசுறுப்பாகப் பேசிக்கொண்டே மூன்றாவது பாதை பற்றி முன்வைக்கின்றார்கள். இவர்கள் முன்வைப்பது தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி மட்டுமல்ல, அய்க்கிய இலங்கைப் புரட்சி கூட சாத்தியம் இல்லை. தனி ஒரு நாட்டில் புரட்சி வெற்றி பெற முடியாது. உலகம் தழுவிய புரட்சிதான் ஒரே வழி எனக் கருதுகிறார்கள். முதலாளித்துவத்தினதும், ஏகாதிபத்தியங்களினதும் ஏற்றத் தாழ்வான சீரற்ற வளர்ச்சியையும்

www.tamilarangam.net



புறக்கணித்து இம்முடிவிற்கு வந்து சேர்ந்து இருக்கிறார்கள். இப்படியே ஒரே மூச்சில் ட்ரொஸ்கியின் கால்களில் வீழ்ந்து விட்டார்கள். இவர்களுக்கு ரசியா, சீனா, கிழக்க அய்ரோப்பாவில் நடந்த முதலாளித்துவ மீட்சி வரப்பிரசாதமாக ஆகிவிட்டது. தமிழீழம் பிரிவது என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருந்த போது, இவர்களது எழுத்துக்களிலும், சட்டைப் பையினுள்ளும் வாழ்ந்த ஸ்டாலின் இன்று இவர்களது பரமவிரோதியாகி விட்டார். உலக அளவில் ஏகாதிபத்தியமும், திரிபுவாதிகளும், ட்ரொஸ்கிய வாதிகளும், புதிய இடதுகளும் கட்டவிழ்த்து விட்டுள்ள மார்க்சிய – லெனினிய – மாவோ சிந்தனை எதிர்ப்பு மார்க்கத்தாலும், நவீன திரிபு வாதங்களாலும் ஆகர்சிக்கப் பட்டுள்ளனர். கட்டிப் போடப்பட்டு உள்ளனர். அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் இவர்களின் புகலிடம் இருப்பதால் அங்கு ட்ரொஸ்கிய த்தையும், லெனினிய த்தையும் இணைத்து தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்ட விரும்பும் நவீன ட்ரொஸ்கிய வாதத்தின் அமைப்புக்களின் தாக்கம் இவர்களை முற்றாகவே திசைதிருப்பி உள்ளது. இந்த ட்ரொஸ்கிய வாத திசை விலகல்காரர்களும் 'மூன்றாவது பாதையை', 'மக்கள் பாதையை' உருவாக்குவது வளர்ப்பது பற்றி முன்வைக்கிறார்கள்.

ஆகவே மேற்பார்த்த சந்தர்ப்பவாத அரசியல் வழிக்காரர்கள், திரிபு வாதப் பாதையாளர்கள, ட்ரொஸ்கிய வாதிகளின் மூன்றாவது பாதைக்கும் புரட்சிகர பாட்டாளி வர்க்க சக்திகளின் மூன்றாவது பாதைக்கும் இடையில் மலைக்கும், மடுவுக்கும் இடையிலான வேறுபாடு சித்தாந்த நிலையிலும், அரசியல் அமைப்புக் கண்ணோட்டத்திலும் உண்டு என்பது தெளிவாகும். தேசிய இன யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற நமது நாட்டில் நடைமுறையில் ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சி யுத்தத்தில் தலையிட்டு செய்கின்ற நிலை இல்லாது இருக்கின்ற போது, புரட்சிகர அரசியலில் பங்கு வகிக்காது இருக்கின்ற போது புரட்சிகர தேசபக்த சக்திகளின் பலம்வாய்ந்த ஐக்கிய முன்னணியை நாம் எங்கே போய் தேட முடியும்? எனவே, நாம் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்வோம். போராட்டக் களத்தில் இருந்தும், யுத்தத்தில் இருந்தும் அன்னியப்பட்டு நின்று ஒரு புரட்சிகரக் கட்சியை கட்டிவிட முடியாது, என்பதே அது. நாம் புரிந்து கொண்டிருக்கின்ற மார்க்சிய – லெனினிய – மாவோ சித்தாந்தத்தை நமது நாட்டின் ஸ்துலமான சமுதாய செயற்பாட்டுகளுடன் இணைத்துப் பிரித்தாக வேண்டும். அதைவிடுத்து நேரடியாகத் தத்துவப் புத்தகங்களுடன் ஒருமைப்பட்டு காண்பதும், அப்படிப் புத்தகத்துடன் ஒருமைப்பட்டு கண்டவர்களைக் கொண்டு தேடிப்பிடித்து கட்சியைக் கட்டுவது அல்லது அனுபவவாதப் பாதையில் செல்வது என்பது, மீண்டும் தோல்விக்கும், திசை விலகலுக்கும் இட்டுச் செல்லும் என்பதை வளர்ந்து வரும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், சிறு முதலாளித்தவ சுத்த இராணுவ சித்தாந்தத்தின் இருப்பும், சந்தர்ப்ப வாத மார்க்சியத்தின் எழுச்சி அலை ஓய்வுக்குப் பின், உயிர்த்துடிப்புடன் எழுந்து வருகின்ற புரட்சிகர தேச பக்த எண்ணம் கொண்ட இளம் துளிர்கள், ஒவ்வோன்றும் உண்மையான மக்கள் விடுதலைப் பாதையை, மார்க்சிய – லெனினிய . மாவோ சிந்தனைப் பாதையை கண்டு பிடிக்கும் ஆற்றலைப் பெற்றக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பவாத அரசியலையும் நவீன திரிபும், ட்ரொஸ்கிய வாத பாதையையும் நோக்கிச் செல்லும், மூன்றாவது பாதை என்ற பெயரில் தலைகாட்டும் திசை விலகலை நிராகரிக்க வேண்டும். புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டும், அதன் தலைமை வழிகாட்டலை ஏற்றுக் கொள்ளும் முற்போக்கு தேசபக்த சனநாயகச் சக்திகளின் அய்க்கிய முன்னணியை உருவாக்கும் புரட்சிகரமான மூன்றாவது பாதையை நோக்கி அணிதிரள வேண்டும்.

**(நன்றி நவசகாப்தம். இதழ் 11)**

***

# பறை முழக்கத்துடன் போர் முழக்கம்.

[illegible]

தமிழ் நாடு மக்கள் கலை இலக்கிய கழகத்தின் பாடல் ஒலிப் பேழைகளும், தமிழ் மக்கள் இசை விழா இரண்டாம் ஆண்டு நிகழ்சிகளின் ஒலி நாடாக்களும் கிடைக்கப் பெற்றன. ம.க.இ.க இன் பாடல் ஒலிப் பேழைகள் இதுவரை வெளிவந்த 5 வெளியீடுகளும் முறையே 1) தேர்தல் வந்து தீர்ந்தது என்ன? (ஒக்டோபர் 1989) 2)இருண்டகாலம் 3)அசுரகானம் 4)அடிமைசாசனம், 5)அண்ணன் வாராரு என்பனவாகும். தமிழ் மக்கள் இசைவிழா நிகழ்சிகளின் ஒலி நாடாக்கள் பல பேராசிரியர்களின் அராய்ச்சி உரைகளையும், தமிழ் இசை நிகழ்சிகளையும் உள்ளடக்கி உள்ளன.

முதன் (முதலாக) முறையாக கலை இலக்கியம் பரந்துபட்ட மக்களுக் காகப் படைக்கப்படலாம் என்பதையும் அதன் மூலம் அவர்களை அறிவூட் டலாம் என்பதையும் மிகச்சிறப்பாக தமது ஒலி நாடாக்கள் மூலம் ம.க.இ.க நிறைவேற்றி உள்ளது. ''கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே'' என்ற மக்கள் கோசத்தை கடந்த காலங்களில் எள்ளி நகையாடி வந்த ஆளும் வர்க்க எடுபிடி இலக்கிய வாதிகளையும் அவர்களின் கூக்குரலான ''கலை கலைக் காகவே'' என்ற ஆளும் வர்க்க சார்புக் குரலையும் அடித்து நொருக்கியுள்ளது. மேலும் கடந்து காலங்களில் ஒடுக்கப்பட்ட வர்க்கம் சார்ந்த, மக்கள் சார்ந்த இலக்கியப் படைப்புக்களை அரசியல் அற்ற வெறும் பிரச்சார இலக்கியம் என்று வசைபாடிய பண்டித பிற்போக்கு வாதிகளை மக்கள் எதிரிகளை ம.க.இ.க இன் இப்படைப்புக்கள் எங்கலாலும் மக்கள் சார்ந்த அழகியல் கலை இலக்கியத்தை படைக்க முடியும் என்பதை எதிரிகளுக்கு எடுத்துக் காட்டியுள்ளன.

முதல் வெளியீடான தேர்தல் வந்து தீர்ந்தது என்ன? என்ற தொகுப்பில் கூடிய அளவு பிரச்சார வாடையே வீசியது.ஆனால் தொடர்ந்து வந்த வெளியீடுகள் இக்குறைபாட்டை நீக்கி

www.tamilarangam.net



'கச்சிறப்பாக அமைந்து உள்ளன. ாக்கியமாக அடிமை சாசனம், ாசுரகானம் என்பன குறிப்பிடத் க்கன. இங்கே சுட்டிக்காட்டப்பட வண்டிய விடயம் மிகச் சாதாரண ாமர மக்களும் புரியக் கூடிய விதத்தில் ாரசியல் கருத்துக்கள் வர்க்கக் ண்ணோட்டத்தில் (அவர்களின் ாணடியில்) முன்வைக்கப் பட்டுள்ளன. ார்க்சியம் என்பது இன்றுள்ள ர்வதேச நிலையில் மிகக் குழப்பமான ட்டத்திலும், தற்காலிக ின்னடைவின் மத்தி யிலும் உள்ளது. ிதனால் மார்க்கியம் இன்று காதிபத்திய வாதிகளினாலும், ிரிபுவாதிக ளினாலும், கடந்த கால ார்க்சிய லெனினிய கட்சிக்குள் மறைந்திருந்து பின் அவற்றின் லைமையைக் கைப்பற்றிய தலாளித்துவ பாதையாளர் களாலும் உ-ம் சோவியத் ருஷ்சியா, சீனா) ிரித்தலுக்கும் அழித்தலுக்கும் ிடையில் தத்தளிக்கின்றது. இவர்கள் ாரும் மார்க்சிய, லெனினிய, மாவோ ிந்தனையின் அடி அத்திவாரமான இரு ிடையங்களை மறுதலிப் பதிலேயே ிகக் கவனமாயுள்ளனர். அவையாவன

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

. வர்க்கப் போராட்டம்

ிந்த நிலையில் ம.க.இ.க இன் ாடல்கள் யாவும் மார்க்சியத்தின் அடிப்படையைப் பேணுகின்ற கருத்துக்களை முன்வைப்பதும் ற்போதைய இந்தியப் புரட்சிக்கு ாவோவின் புதிய ஜனநாயக மக்கள் ுரட்சி என்பதை தெளிவாக வைப்பதும் ிகச் சரியானதே.

மேலும் ''அடிமை சாசனம்'' என்ற தொகுப்பில் அமெரிக்க ஏகாதிப த்தியத்தின் புதிய ஒழுங்கு பற்றியும், அதன் பின்னால் வருகின்ற மிக மோசமான உலக மக்களின் மேலான ஒடுக்குமுறை பற்றியும் குறிப்பாக இந்திய மக்கள் மேல் சுமத்தப்படுகின்ற பொருளாதாரச் சுரண்டல் பற்றியும் விளங்க வைத்து அதற்குத் துணை போகின்ற இந்தியத் தரகு முதலாளித்துவ கிருமினல் கும்பல்களை தோலுரித்துக் காட்டுகின்றது. உதாரணமாக 'ஊரான் ஊரான் தோட்ட த்தி'லே ருவன் வைத்தான் வெள்ளரிக்கா, ாசுக்கு இரண்டு விக்கச் சொல்லி ாகிதம் போட்டான் வெள்ளைக்காரன்'' என்ற பாடல் வரிகள் சாதாரண பாமர மக்களுக்கு அவர்கள் பாஷையில் மேற்கூறிய விடையத்தை இலகுவாக விளங்க வைக்கின்றது. மாக்சிஸ்டுக்கள் எவ்வளவு தான் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அதை மக்களிடம் இவர்கள் விளங்கக் கூடிய முறையில் எடுத்தியம்பாவிடின் அவைகள் வெறும் ஏட்டுச் சுரக்காய்களாகவே இருந்து விடும்.

தமிழ் மக்கள் இசைவிழவில் பேராசிரியர் தண்டாயுதபாணி குறிப்பிட்டது போல் கடந்த பல சகாப்தங்களாக மேடைப் பேச்சுக்களோ, எழுத்துக்களோ மக்களை பெரிய அளவிற்கு விழிப்படைய வைக்க முடியவில்லை. எனவே இன்று தமிழ் இசைக்கூடாக அவர்களை இலகுவாக விழிப்படைய வைக்க முடியும் என அடித்துக் கூறியுள்ளார். அந்த வகையில் ம.க.இ.க இன் இவ்முயற்சி சரியான திசை வழியிலேயே அமைந்துள்ளது. கடந்த பலநூறு வருடங்களாக தமிழிசையை ஆளும் வர்க்கம் தனது இருப்பிற்கு தனது நலனிற்கும் மட்டுமே பயன்படுத்தி வந்தது. இன்றும் பயன் படுத்துகின்றது.

இதை நாம் உடைக்க வேண்டுமாயின் நாமும் தமிழி சையை எமது வர்க்க நலன் சார்பாக மக்கள் சார்பாக உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். ம.க.இ.க இன் பாடல் தொகுப்புக்கள் யாவும் தமிழிசை யை மிகச்சிறப்பாக ஒவ்வேண்றும் அதற்குரிய இடத்தில் பயன்படு த்துப்பட்டுள்ளது என்பது எனதவிப் பிராயமாகும். அடுத்து இதில் மிக மிக முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயம் பாடல்களில் வரும் ஒவ்வொரு சிறு சொல்லும். மிக ஆழமான கருத்துக்களு டனேயே வெளிப்படுகின்றன. தேவையற்ற சிறு சொல் கூட தவிர்க்கப்பட்டுள்ளது.

''அசுரகானம்'' தொகுப்பில் திராவிட பாரம்பரியம், ஆரிய வருகை ஆரியத்தின் சதித்தனம், சூத்திரன் (ஒடுக்கப்பட்ட மக்கள்) மீதான ஒடுக்குமுறை என்பன மிகத் தெளிவாக வெளிக் கொண்டு வரப்படுவதுடன் அவர்களை தாழ்வு மனப்பாண்மையில் இருந்தும் அறிவீனத்தில் இருந்தும் தட்டி எழுப்புகின்றது. இந்திய புதிய தரகு முதலாளித்துவத்தின் மகாத்மா ஆன காந்தியினால் கொடுக்கப்பட்ட ''அரிசனன்'' என்ற பதத்தின் பின்னால் மறைந்துள்ள வர்க்க ஒடுக்கு முறை அதை புதிய வழியில் தொடர்ந்து நீடிக்க முனைகின்ற காந்தியின் சதி சரியான முறையில் அம்பலப்படுத்தப் படுகின்றது. சாதிப்பிரிவினை ஆரியர்களினால் திராவிடர்களிடம் புகுத்தப்பட்டதென்று சொல்லப் படுகின்றது. இவ்வாறே ஐரோப்பிய மாண வர்கள் உயர் வகுப்பில் கற்கும் சரித்திரப் புத்தகத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் ராகுல சாங்கிருத்தியனின் ''வல்காவில் இருந்து கங்கை வரை'' (1949 இல் வெளியீட ப்பட்டது) என்ற நூலில் (இந்தோ ஐரோப்பியர்) ஆரியர் தெற்கு நோக்கி வந்த போது அசுரர் (திராவிடர்) கள் முன்னேறிய சமூக வாழ்கையை கொண்டிருந்த போதும் அவர்கள் மத்தியில் அரசன், போர்வீரன், தொழிலாளி, வர்த்தகன் என்ற வேறுபாடுகள் இருந்ததாகக் கூறியுள்ளார். பின்னர் அதையே ஆரியர்கள் பின்பற்றியதாக எண்ண இடமுண்டு ஆனால் இது ஆய்விற்குரிய விடையம். எனது அறிவிற்கு எட்டிய வரையில் இவ்வாறுதான் விளங்கிக் கொண்டேன்.

இக்கட்டுரையுடன் தொடர்பி ல்லாத ஒரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டி உள்ளது ஆதோ சாங்கிருத்தியனின் புத்தகத்தில் ஆரியரின் திராவிடர் மேலான வெற்றிக்கு இரு காரணங்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. 1) இந்திய ஆரியர் நாடோடிகள் என்ற வகையில் குதிரைப் போர் வீரராக இருந்த அவர்கள் வெற்றிக்கு மிக முக்கியமானது. 2) அந்த நாடோடிக் கூட்டத்தில் போரின் போது ஆண், பெண் என்ற சகலருமே ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

இரண்டாவது விடையம் மிக முக்கியமானது. அன்று திராவிட ர்கள் மத்தியில் போர்வீரர்கள் மாத்திரமே போரிட்டார்கள். மற்றவர்கள் (மற்றப்பிரிவினர்) பார்வையாளர் களாக இருந்தனர். இதனால் ஆரியரிடம் தோற்றது மட்டுமல்லாமல் ஆயிரக்கண க்கான வருடங்களுக்கு தங்கள் பரம்பரையையே ஆரியர்களுக்க என்றும் அடிமையாக்கிச் சென்றா ர்கள். இதை இன்றைய தமிழீழப் போராளிகளும், கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்பவுமே மக்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தும் போது அதாவது மக்கள் படை உருவாகும் போது மாத்திரமே நிரந்தரமான வெற்றியை உருவாக்க முடியும்.

ம.க.இ.க இன் 5 தாவது வெளியீடான ''அண்ணன் வாறாரு'' என்ற தொகுதி ஜெயா ஆட்சியின் புதிய கிருமினல் ரௌடிகளை அம்பலப்படுத்துகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதில் ஜெயாவின் வளர்ப்புமகன் கல்யாணம் பற்றிய செய்தியில் இதுவே ஜெயா ஆட்சியின் கடைசிக்காட்சி என திட்டவட்டமாகச் சொல்லப் படுகின்றது. (இவ்வெளியீடு 95இல் வந்தது) அதில் வரும் சில பாடல்கள் கவனத்திற்கு உரியன. இதன் மூலம் மக்களுக்கு ஜெயா என்ற பார்ப்பன மக்கள் விரோத கும்பலின் கொள்ளைக் கிரிமினல் ஆட்சி புட்டுப் புட்டு வைக்கப் படுகின்றது. பின்வரும் பாடல் வரிகளை நோக்குவோம்.

சொல்லச் சொல்ல மாளாது
சொரனையில்லை என்றால் எது
ஒரு கல்யாணக் கதை கேளு ..........

எனத் தொடங்குகின்றது.

அப்பாடலில் தொடர்ந்து வருகின்ற வரிகள் தமிழீழ மக்களாகிய எங்கள் கவனிப்புக்கும் உரியன. அதையும் பார்ப்போம்.

பழநெடுமாறன் வந்தாரு
பந்தியில் வீரமாய் தின்னாரு
(சப்பிட்டாரு)
வீரமணியும் வந்தாரு – மானத்தை
மொய்யாய் (பரிசு) தந்தாரு
அட மானம் (அடமானம்)

திராவிடத் தூண்களாக தம்மை வெளிக்காட்டும் வேடதாரிகள் ஜெயாவின் வளர்ப்பு மகனின் கல்யாண கோமாளிக் கூட்டத்தில் பங்கு பற்றி எவ்வாறு திராவிட மானத்தை பறித்தெடுத்தார்கள் என்பதும், இவர்களும் உண்மையிலே ஆளும் வர்க்க சார்பு சக்திகளே என்பதும் மேலுள்ள பாடல் வரிகள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது. தொடர்ந்து வரும் பாடல்வரிகள் எவ்வாறு மக்கள் பணம் ஊதாரித் தனமாகச் செலவிடப்படுகின்றது என்பதை மிக நயமாக முன்வைக்கப் படுகின்றது. பாடல்வரிகள் இவ்வாறு தொடர்கின்றன.

எங்கள் வீட்டுக் கல்யாணத்திலே
நாலு தடிமை நட்டு
ஒரு கீத்துப் பந்தல் போடுவோம்.
கொஞ்சம் பேர் உள்ளேயும் மீதிப்
பேர் வெளியேயும் இருப்பார்கள்.
ஆனால் ஜெயாவின் வளர்ப்பு மகன்
கல்யாணத்திலே
70 ஏக்கரிலே பந்தல், மூவாயிரம்
சமையல்காரர் ஆயிரம் கோழி
மூவாயிரம் ஆடு ........ ......

இவை இரண்டையும் கேட்டு ஒப்பிடுகின்ற எந்த மக்களாவது பின்னர் ஜெயாவிற்கு ஓட்டுப் போடுவார்களா? இன்று இந்த மக்கள் தான் ஜெயாவைத் துரத்தி அடித்து வென்றார்களே ஒழிய ஊழல் மன்னன் கருணாநிதியல்ல என்பதும் எங்களுக்குப்புரிய வேண்டும். அன்று இதைத் தட்டிக் கேட்க எந்த ஒரு எதிர்கட்சிக்கும் துணிவில்லை. இங்கே நான் முன்னர் குறிப்பிட்ட இதே பழ நெடுமாறன், வீரமணி போன்ற கபவாணிப்பயல்கள் தான் தமிழீழப் போராட்டத்தின் ஆதரவுத் தூண்களாகவும், அண்ணன்மார்களாக தம்பிகளால் முன்னிறுத்தப்படு கின்றார்கள். உண்மையில் ஜெயாவின் பாசிச, கிரிமினல், பார்ப்பனிய ஆட்சிக்கு எதிராகவும், தமிழீழ மக்களின் தேச விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் தடாச் சட்டத்தின் கீழேயே போராடி பல நக்சல்பாரித் தோழர்கள் சிறை சென்றார்கள். அதேவேளை தாடச் சட்டத்துடன் ஜெயாவின் காலில் மண்டியிட்ட வர்களில் ஒருவர்தான் கறுப்புச் சட்டை வீரமணி என்பது இருண்டகாலம் என்ற பாடல் தொகுப்பில் வெளியிடப் படுகின்றது. உண்மையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் உண்மையான நண்பர்கள் தமிழக மக்களும், தமிழக புரட்சிகர சக்திகளுமே ஒளிய இந்தப் நாடாளுமன்ற குட்டை அரசியலில் ஊறிய சந்தர்ப்பவாதப் பச்சோந் திகளல்ல. அடுத்து முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் பற்றியும் அதன் கெடுகொட்ட தன்மை பற்றியும் மேற்படி ஒலிநாடாக்கலில் விளங்கப் படுத்தப்படுகிறது. இவ்வாறான மக்களை அரசியல் அறிவூட்டும் விதத்தில் இப்பாடல்கள் சிறப்பாக பணியாற்றியுள்ளன. இதை ஒவ்வொரு தமிழீழத்தவரும் கேட்டு அறிவை பெறவேண்டியது மிக முக்கியமாகும். இதன் இயக்கத்தினால் 1995 ல் மதுரையில் நடாத்தப்பட்ட தமிழ் மக்கள் இசை விழா (இரண்டாம் ஆண்டு) பற்றிய விபரங்களைத் தருவோம்.

கடைசியாக 10 வருடங்களின் பின் 'மண்சுமந்த மேனியர்', 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' இரு தொகுதிகளையும் கேட்கவும் மேற்கூறியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிந்தது. இப்போதுதான் எங்களது அரசியல் பலவீனத்தை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள கூடியதாகவுள்ளது. 1985ல் தமிழீழத்தில் வெளிவந்த மிகச் சிறப்பான கலைவடிவம் என்று இவற்றைக் கூறினால் மிகையாகாது. ஆனால் அது மக்களிடம் கொண்டு சென்ற கருத்துக்கள் என்ன என்பதைத் திரும்பிப் பார்ப்போமானால் வெறும் இடைவெளிதான் மிஞ்சுகிறது. இதை இருவிடயங் களுக்குள் சுருக்கிக்கொள்ளலாம்.

1. இராணுவ ஒடுக்குமுறையை, மக்களின் அவலங்களை யாழ்ப்பாண சமூகத்திற்கே பிரத்தியோகமான, தனிமனித ஈடேற்றத்தை சமூக உணர்வில்லாத தன்மையை சாடியது.

௨. எல்லோரையும் ஆயுதமேந்தி போராட அழைத்தது.

எவர்தலைமையில் எந்த அரசியல் வழி என்பதைக் கூட கூறவில்லை. ஆனால் அன்றிருந்த அரசியல் தலைமை என்பது யாழ்ப்பாண பிற்போக்கு ஆளும் வர்க்க தலைமையே என்பதை நாம் மறக்கக் கூடாது. எவ்வளவு தான் கலைநயம் படைத்தவைகளாக இருந்த போதும் அவை ஆளும் வர்க்கத்திற்கே (புலிகளுக்கே) கூடுதலாக சேவகம் செய்துள்ளது. தொடர்ந்து வெளிவந்த மண்சுமந்த மேனியர் பாகம் ௨ அதே ஆளும் வர்க்கக் கும்பலால் (புலிகளால்) முழுப்பப்பட்டும் கூட இதன் ஆக்கச்சக்திகளினால் அன்று இப்பிற்போக்குத் தலைமைகளை புரிந்து கொள்ளவில்லை. இன்று 10 வருடங்களின் பின்னர் வரலாறு அக்கலைஞர்களுக்கு போதித் திருக்கும். ஆனால் அது அக்கலைஞர்களின் தனிப்பட்ட தவறல்ல. ஏனெனில் அன்று அவர்களுக்கு வழிகாட்ட ஒரு கட்சி இருக்கவில்லை. (இங்கு நான் கட்சி என்று குறிப்பிடுவது முன்னேறிய பாட்டாளி வர்க்கக் கட்சியையே. இன்றும் கூட அக்கட்சி உருவாகவில்லை என்பது புரட்சியாளர்களின் தவறு மாத்திரமல்ல மக்களின் தவறுமாகும்)

100 வது சரிநிகரில் (சேரன்) குறிப்பிடுவது போல் காணமல் போன நண்பர்களில் (யாழ்பாணத்தில்) தில்லை என்றழைக்கப்படுகின்ற தில்லைநாதன் மேற்கூறிய கலை நிகழ்ச்சியில் முக்கிய பங்காற்றியவர் என்பதும் சமூக உணர்வுள்ள ஒரு சிறந்து நபர் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடையம். அன்று இக்கலை நிகழ்ச்சிக்கூடாக எவ்வித அரசியல் தேடலும் இல்லாமல் யாருக்கு சேவை செய்தாரோ (தன்னை அறியாமல்) அதே யாழ்ப்பாண

www.tamilarangam.net



பிற்போக்கு பாசிய தலைமையால் படுகொலை செய்யப்பட்டார். இன்றும் எத்தனையோ நண்பர்கள் அகதிகளாக ஓட விரட்டப்பட்டனர் இன்று தமிழீழம் தவளைகளின் கூடாரமாகிவிட்டது.
பிழையோ சரியோ 1985 இல் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் மண்சுமந்த மேனியர், சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பன பாசிச பிற்போக்கு தலைமை களால் ஆரம்பத்திலேயே, முளையிலேயே கிள்ளப்பட்டு விட்டன. உண்மையில் ஒரு தேசவிடுதலைப் போராட்டத்தில் சரியான புரட்சிகரத் தலைமை இருந்திருந்தால் போராட்டம் மாத்திரமல்ல கலை இலக்கிய சமூக மாற்றமும் இன்று சிறப்பாக வளர்ந்திருக்க முடியும். குறைந்த பட்சம் பாரதியார் போன்ற ஒருமுற்போக்கு தேசியவாத கலைப் படைப்பாளி தமிழன் எழுச்சிக்கும், அதன் வளர்ச்சி க்கும், மக்களுக்கும் சேவையாற்றி யிருப்பான். எதிர்காலத் திலாவது அப்படி ஒரு நிலையை உருவாக்குவோம். மேலும் தமிழக புரட்சிகர நண்பர்களிடமிருந்து கற்றுக் கொள்வோம்.

***

**இவ் ஒலி நாடக்களை பெற்றக் கொள் விரும்புவோர் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்**

SAMAR
87 RUEDE COLOMBES
92600 ASNIERS SUR SEINE
FRANCE

தற்போது பலரால் பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது அவற்றை சரியான முறையில் ஓர் தொழிலாளர் வர்க்க சார்புக் கண்ணோட்டத்துடன் (மார்க்கிய லெனினிய) வெளிப்படுத்த வேண்டின் விமர்சனங்கள் அவசியமாகின்றது. தமது வர்க்க நிலை சார்ந்த நிலையில் ஆக்கங்களை வடிப்பதன் மூலம் சரியான முறையில் வெளிவரவேண்டியவற்றை திசைவிலகலுக்கு உட்படுத்துவதை எதிர்த்து போராடும் வகையில் இவ்வாக்கம் அமைந்துள்ளது. இவ்வாக்கம் முற்றுப் பெறவில்லை. இவ்விடயம் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்திருக்க முடியும் ஆனால் கட்டுரை ஆசிரியர் ஏனோ இடையில் நிறுத்தி விட்டார். இவ்வாறன விமர்சனங்கள் வெறும் பதில் கொடுப்புடன் நின்று விடாது தொடர்ந்து ஆணித்தரமான கருத்தை முன்வைத்து திசைவிலகலுக்குட்படுத்தும் கருத்துக்களை நிராகரித்து ஒதுக்கவேண்டும். இதனடிப்படையில் இவ்வாக்கத்தை நாம் இங்கு பிரசுரிக்கின்றோம்.

# பெண்கள் ஆண்களின் அடிமை அல்ல, பெண்கள் போராடவும் தலைமை தாங்கவும் தகுதியுடையவர்களே.

ஜயாகரன்.

'துயரம் மலையளவுதான், ஆனால் மௌனம் காத்தல் சாத்தியம் இல்லை'' என தலைப்பிட்டு ராதிகா குமாரசாமி சரிநிகர் 118இல் எழுதியுள்ள விமர்சனம் தலையங்கத்திற்கு எதிராகவே உள்ளது.
தமிழஹ இனத்தின் துயம் என்பது மௌனத்தை சாத்தியமாக்க வில்லை. மாறாக போராட முன்தள்ளுகின்றது. அப்போரா ட்டம் ஆயுதப் போராட்டமாக வெடிக்கின்றது. மனித இனத்தின் எல்லா வரலாறும், ஏன் எல்லா உயிர் வாழ்வும், ஏன் எல்லா உயிரினமும் போராடியே வாழ்கின்றன. ஆகவே போராட்டம் என்பது மனிதனின் தவிர்க் முடியாத வாழ்வியல் இருப்புக்கான அடிப்படை ஆகும். இதை இன்று ஏகாதிபத்தியம் மறுதலிக்க, மக்களை பண்ணை மாடாக்க முனைகின்றது.
இன்று புலிகளில் இணைந்து போராடும், பெண்கள் போராட்டம் அதற்கு உள்ளடங்கியதே ஆகும். புலிகளின் அரசியலும் அதனால் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் என்பது ஒரு மனித இனத்தின் போராட்டத்தை மறுதலிப்பதுக்கு இட்டுச் செல்ல முடியாது. மாறாக அது விமர்சனத்திற்குரியது.
அடுத்து ஓர் இடத்தில் ''முழு உலகையும் எடுத்துக் கொண்டாலும் சரி, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித உரிமைகளை ஈட்டிக் கொள்வதற்கு எதிராக பெரும் தடைக் கற்றளாக உள்ளவை மத, இனத்துவ மற்றும் தேசியவாதத் தத்துவார்த் தங்களே இந்த யதார்த்த நிலையை'' எனக் குறிப்பிட்டு இவர் கருத்துக் கூறுகின்றார்.
இந்த பிரதான கூற்றுதான் இக்கட்டுரையின் மையமாகும். தேசிய, இன, மதத்திற்கு எதிரான போராட்டத்தில் தம்மை ஈடு படுத்திக் கொண்டவர்கள் யார்? வல்லவனின் ஒடுக்கு முறைக்கு எதிரான ஒடுக்கப்படும் மக்களின் குரல்களே. இன்று உலக மக்களின் சனநாயகத்திற்கு, சமாதா னத்திற்கு சவால் விடுகின்றது எனக் கூறுவது இன்றைய உலகில் ஒற்றைப் பொருளாதார ஒழுங்கை பாதுகாக்கக் கோருவதே யாகும்.
இன்று உலகில் சமாதானத்துக்கு, ஜனநாயகத்திற்கு சவால்விடுபவர்கள் உண்மையில் மேல்நிலை வல்லரசுகளே. அதை மறுத்து அதற்கு பூச்சடிக் விரும்பும் இவர் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய, இன, மத உணர்வுகள் மீது சுமத்தி விடுவது என்பது ஆபத்தானதே.
இன்று உலகில் எப்பக்கத்திலும் எழும் மத, இன, தேசிய, நிற வாதத்தை எடுப்பின், அதன் பின்னனியில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேல் நிலை வல்லரசுகள் மிகத் திட்டமிட்டு இயங்குகின்றன. இந்த நெருப்பில் குளிர்காயும் ஏகாதிபத்தியங்கள், அதையே இவர்கள் மீது குற்றச்சாட்டாக மீள வைக்கின்றனர். அதை நேரடி யாகவும், மறைமுகமாகவும் முன்வைக்கின்றனர். அதையே ராதிகா குமாரசாமியும்

www.tamilarangam.net



செய்கின்றார் என்பதை மேற்கூறிய வாதம் தெளிவாக்கிறது.

அடுத்து இவர் குறிப்பிடுகிறார் ''இலங்கை தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனில் வன்முறைப் போராட்டமே சட்ட நிலைத் தகவுள்ள வழி என்று .......'' எனக் கூறி ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கும் இவர் ஆயுதத்தைக் கைவிடக் கோருகின்றார். இலங்கையில் ஆயுதப் போராட்டம் அல்லாத மாற்று வழியை முன்வைக்கின்றார். 1948 முதல் அவர் காட்டும் உதாரணத்தை மட்டும் கட்டுரையில் காண வில்லை. ஏன்? ஆயுதப் போராட்டம் மாற்று வழி இன்றித்தான் உருவானது என்பதை சிங்கள இனவாதிகள் மறுப்பது போல் இவரும் மறுப்பதுதான் வேடிக்கை.

ஆயுதப் போராட்டம் தமிழ் மக்கள் மாற்று வழி இன்றித் திணிக்கப்பட்டதே ஒழிய தாமாக வரிந்து கொண்டதல்ல. இதில் ஆண் போராடினால் என்ன, பெண் போராடியால் என்ன அது தமிழ் மக்களின் போராட்டமே ஒழிய அதைத் தனித்தனியாக வேறு படுத்தி அடையாளப் படுத்துவது அவசியமில்லை. ஆனால் அப் போராட்டத்தின் அரசியல் என்ன என்பது மட்டுமே ஆண் பெண்ணின் பண்பியல் மாற்றத்தை மாற்றுகின்றது. ''........அவர்கள் தமது பெண்மையைக் கைவிடும் பலவந்தம் ஏற்படுகின்றது...'' எனக் கூறி பெண்மை என்பதை நியாயப் படுத்த விரும்புகின்றார். பெண்மை என்பது ஆண்டாண்டு காலமாக ஆண்களால் உருவாக்கப்பட்ட வரையறையே ஒழிய பெண்களால் உருவாக்கப்பட்ட வரையறை அல்ல. பெண் நிலைவாதியான இவர் அதைக் காண மறுப்பது ஏன்? பெண்மை என்பது ஆண்களால் திணிக்கப்பட்டதே ஒழிய, பெண்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரிவோ, மக்களின் இயன்பான கண்டு பிடிப்போ அல்ல.

''......... சங்க கால இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்ற ராகவன் அவர்கள் கன்னிப் பெண்கள் எதிரியுடன் போர் புரிவதற்கென உண்மையில் ஒரு முறைமை ரீதியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு முன் நிகழ்வைக் கூற முடியுமா?'' எனக் கேட்டு சவால் விடுகின்றார்.

ஒரு பெண் நிலைவாதி அதுவும் பெண்ணாக இருந்து இக்கேள்வியைக் கேட்பது எனக்கு அதிர்ச்சியை ஊட்டுகின்றது. மனித இனத்தின் ஆரம்பத்திலேயே பெண்கள் தலைமை தாங்கியதும் மற்றைய குழுக்களுடன் யுத்தத் தில் ஈடுபட, பெண் உட்பட பெண் தலைமையில் போராடியது மனித இன வரலாறு.

சங்க கால இலக்கியம் என்பது பெண்கள் அடிமையாக்கப்பட்ட பின் எழுதப்பட்டதே ஆகும். அப்போது பெண்கள் பிள்ளை பெறவும், ஆணை மகிழ்விக்கவும், ஆணுக்கு சேவை செய்யவும் என வரையறுக்கப்பட்ட பின் எழுதப்பட்டதே சங்க கால இலக்கியமாகும்.

கி.மு 300 வருடங்களில் இருந்த சமூக அமைப்பில் பெண்கள் யுத்தத்தில் ஈடுபட்டதையும், தலைமை தாங்கியதையும் கொண்ட கல்வெட்டு நூல்கள் இன்னும் உள்ளது. 'சிந்து முதல் கங்கை வரை' என்ற கல்வேட்டு நூலைப் படித்துப் பாருங்கள். அதில் எப்படிப் பெண் இருந்தாள் என்பதையும், பல்வேறு சமூகக் கூட்டத்தில் பெண்ணின் பாத்திரம் சிலவேளை உங்கள் கட்டுரையை தலைகீழாக மாற்றி விடும். பெண்கள் எப்படி இருந்தனர், தலைமை தாங்கினர், போராடினர் என்பது தெரிந்து கொள்வதும் அதன் அடிப்படையில் போராட்டங்களைக் காண்பதும் முன் நிபந்தனையாகும். அதனுடாக அரசியலைப் பார்ப்பதும், அதை விமர்சிப்பதும் அடிப்படையாகிறது.

***

" அராஜகவாதம் (anarchism) ஒரு சமுதாய அரசியல் போக்கு இது உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரம் உட்பட எல்லா வகையான அதிகாரத்திடமும் பகைமை பாராட்டுகிறது. உழைப்பாளி மக்கள் நிறுவன வழியில் ஒழுங்கமைந்து நடத்துகிற அரசியல் போராட்டத்தை எதிர்த்து நிற்கிறது.'

'ஒரு புரட்சிகரக் கூட்டுறவில் தாராளவாதம் என்பது தீங்கு விளைவிக்கும் ஒன்று அது ஐக்கியத்தை அரித்துத் தின்னுகின்ற ஒன்றிணைப்பினைச் சீர்குலைக்கின்ற, வேலையில் பாராமுகத்தை உண்டாக்கின்ற, வேற்றுமையை விதைக்கின்ற ஒரு நச்சுத்திரவம். அது புரட்சிகர அணிகளில் உள்ள கட்டுக் கோப்பான இஸ்தாபன அமைப்பையும், கண்டிப்பான கட்டுப்பாட்டையும் அழித்து விடுகின்றது. கொள்கைகள் பூ ரணமாய் அமுல்நடத்தப்படுவதை அது தடுக்கிறது. கட்சியின் தலைமையில் உள்ள மக்களிடம் இருந்து கட்சி இஸ்தாபனங்களைப் பிரித்து விடுகிறது. இது மிகத் தீய்மையான ஒரு போக்காகும்."

சுமைகள் முகவரி

SUMAIHAL
POSTBOKS 10
5125 BØVÅGEN
NONWAY

ஆக்கபூர்வமான விமர்சனங் களையும், ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர் பார்க்கிறோம்.

சுமைகளின் தபாற் கணக் கிலக்கம்

0826 08 68292



முதலாளித் துவத்தின் தூக்கில் தொழிலா ளர்களின் வாழ்வு இதுதான்!

www.tamilarangam.net





From
Sumaihal
P. Box 10
5125 Bøvågen

4 பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணத்துடன் துண்டிக் கப்பட்டனர். இதன் பின் புலிகளின் தாக்குதல்கள் வழமை போல பல இடங்களில் நடைபெறலாயிற்று. இக்காலத்தில் ஆட்கடத்தல், சித்திரவதை, பேச்சுச்சுதந்திரம்மறுப்பு, சிறைச்சாலை, பாஸ் அறிமுகம் என்பன இக் காலகட்டத்தில் காணப்படலாயிற்று.

**முஸ்லிம் மக்கள் வெளியேற்றம்**

இனவாத எதிர்ப்பிற்குள் ஒரு இனவாதம் தலைதூக்கியது. இதன் அதிஉச்ச வெளிப்பாடனது ஆண்டாண்டு காலமாக சகோதரங் களாக யாழ் மண்ணில் வசித்து வந்த முஸ்லீம் மக்கள் வெளியேற்றப் பட்டனர். இச்செயற்பாடனது எம்மீது உறங்கி இருந்த இனவெறியை உலகிற்குப் பறை சாற்றியது. இம்மக்கள் தமது வீடு வாசல்களையும், உடமைகளையும் இழந்த நிலையில் எங்கு போவது என்று தெரியாது தத்தளித்த வண்ணம் பல இடங்களை நோக்கி நகர்ந்தனர். இவர்களின் வாழ்வில் செல்ல வெண்ணாத் துயரங்களை எம்மால் (தமிழர்களால்) அனுபவிக்கலாயினர்.

**ஆட்சியில் மாற்றம்**

ஐக்கிய தேசியக் கட்சியின் படுதோல்வியும், இதன் மூலம் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதாக் கூறி ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தையானது சிலகாலம் இழுத்தடிக்கப்பட்ட பின்னர். இருவரது மனச்சுத்தி இன்மையால் முறிவடைந்தது. இது புதிய யுத்தத்தை ஏற்படுத்தியதுடன் தமிழ் மக்கள் மீது தான் பாசம் கொண்டவர்கள் என ஐக்கிய முன்னணி அரசு வெளிக் காட்டவும் புலிகளே இப்பிரச்சனைக்கு காரணமானவர்கள் என பறைசாற்றி உலக மக்களின் பக்கம் தமிழ் தேசிய விடுதலைப் போர் அர்த்தமற்ற ஒரு விடயமாக வெளிக் காட்டியுள்ளது. இதன் வளர்ச்சிதான் 5லட்சம் மக்கள் அகதிகளாக்கப்படும் போது உலகே பார்த்துக் கொண்டி ருந்தது. இந்த ஐக்கியமுன்னணி அரசும் முன்னைய அரசுபோலவே தமிழ் மக்களின் மீது இன ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுவதாகவே இருந்தது. இவ்வாறான அவலங்களையும், தவறுகளையும் தொடர்ந்த வண்ணமாக எமது போராட்டம் தொடர்கிறது இதன்பின் நடந்தவற்றை இங்கு தரவில்லை.

மேலே பார்க்கப்பட்டவற்றில் இருந்து நாம் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற கடடையை சுட்டிக் காட்டுகின்றது. இந்தக் கடமையை எவ்வாறு நிறைவேற்றுவது, இதிலிருந்து மீண்டு தொடர்ந்து நடை போடுவது இதுவே இன்று முன்னுள்ள கடமையாகும்.

***

அகநிலைவாதம், குறுங்குழுவாதம், ஒரே மாதிரியான கட்சி எழுத்து நடை ஆகிவற்றறை எதிர்க்கும் போது, நாம் இரண்டு நோக்கங்களைக் மனதில் வைக்க வேண்டும். — ஒன்று, ''கடந்த கால தவறுகளில் இருந்து படிப்பினை பெற்று, எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்ப்பது'', இரண்டு, ''நோயாளியைக் காப்பாற்ற நோய்க்குச் சிகிச்சையளிப்பது.'' எவருடைய உணர்ச்சி வழிப்படுத்தலையும் பொருட்படுத்தாமல் கடந்த காலத் தவறுகள் எல்லாம் அம்பலப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால வேலையை கவனமாகவும் மேலும் சிறப்பாக செய்வதற்காக, கடந்த கால வேலையில் உள்ள தீய அம்சங்களை ஒரு விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, விமர்சனம் செய்வது அவசியமானது. இதுவே ''கடந்த காலத் தவறுகளில் இருந்து படிப்பினை பெற்று , எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்ப்பது'' என்பதன் அர்த்தமாகும். ஆனால் பிழைகளை அம்பலப்படுத்தி, குறைபாடுகளை விமர்சனம் செய்வதில் நமக்குள்ள நோக்கம், வைத்தியர் ஒருவர் நோய்க்குச் சிகிச்சை அழிப்பது போல, நோயாளியைக் காப்பாற்றுவதற்கன்றி , அவர் இறப்பதற்கு சிகிச்சை அழிப்பதல்ல. குடல்வால் நோயுடைய ஒருவர், அறுவை வைத்தியர் அவருடைய குடல்வலை அகற்றியதும் காப்பாற்றப்படுகிறார். தவறுகள் இழைத்து ஒருவர் சிகிச்சைக்கு அஞ்சி தனது நோயை மறைக்காத வரையில், அல்லது சிகிச்சை செய்ய முடியாமல் போகும் அளவுக்குத் தனது பிழைகளில் அழுந்தி நிற்காத வரையில், அவர் உண்மையாகவும் விசுவாசமாகவும் குணப்படுத்தப்பட விரும்பி, தனது தவறுகளைத் திருத்தும் வரையில், நாம் அவரை வரவேற்று, அவர் நல்ல ஒரு தோழராய் மாறுவதற்காக, அவருடைய நோய்க்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, அவரை விளாசித் தாக்குவோமேயானால், நாம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. ஒரு சித்தாந்த அரசியல் நோயைக் குணப்படுத்தும் பொழுது நாம் கடினமாகவும், மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. பதிலுக்கு ''நோயாளியைக் காப்பாற்ற நோய்க்குச் சிகிச்சை அழிப்பது'' என்ற அணுகு முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதுவே சரியான பயனுள்ள ஒரே வழியாகும். (தோழர் மாவோ)

சுமைகளின் மீது அக்கறை கொண்ட சிலரால் எம்மீது வைக்கப்பட்ட விமர்சனங்களை கவனத்தில் கொண்டுள்ளோம். அதாவது எழுத்துப்பிழை அதனால் உருவாகக் கூடிய கருத்துபிழை என்பன கவகத்தில் எடுக்கமாறு சுமைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதனை முடிந்தவரையில் களைய முயற்சிக்கின்றோம். தயவு செய்து எழுத்துப் பிழைகளால் எற்படக் கூடிய கருத்துப் பிழைகளை எமக்குச் சுட்டிக்காட்டுவதன் மூலம் எம் தவறை திருத்தவும் தொடர்ந்து எமது நோக்கத்திற்காகப் பணிபுரியவும் உதவிபுரிவீர்கள் என நம்புகின்றோம்.

***

சுமைகள் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்